

# சுவடுகள்

## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டின் அருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில் அமைச்சர்கள் வந்தனர்.
"எங்களின் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்கள்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக்கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்......"
என்றனர் அவர்கள்.

"சரி சரி
உடனே மறையுங்கள் பிரேதத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடிமறைத்தனர்.

சிகாலோக வாத* சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்மபதமும்* தான் சாம்பலானது.

(நன்றி: மானத்தூர் வாழ்வோம்)
தமிழியல்:கார்த்திகை85.

எம்.ஏ.நுஃமான்.

(*–சிகாலோக வாதம்,தம்மபதம்
என்பன பௌத்தமத அறநூல்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவடுகள்

## வாசகர்கள்

## சந்தா

* சந்தா அனுப்பியவர்கட்கு நன்றி. இன்னும் சிலர் சந்தாப் பணத்தை அனுப்பவில்லை. தயவு செய்து சுவடுகளின் சந்தாப் பணத்தை உரிய காலத்தில் அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

* சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்பப்படும் படைப்புகளின் பிரதியைப் படைப்பாளிகள் தம்முடன் வைத்திருக்குமாறு வேண்டுகிறோம். நடைமுறைச் சிக்கல் காரணமாக பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை.

* உங்கள் நண்பர்களுக்கும் சுவடுகளை அறிமுகம் செய்யுங்கள். சுவடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாக எழுதுங்கள். நாகரீகமான எந்தக் கடிதமும் பிரசுரிக்கப்படும்.

* சுவடுகளின் சந்தா

சகல நாடுகட்கும் 300 குறோணர்களாக (நோர்வே) ஆக்கப்பட்டுள்ளது. சந்தாப் பணத்தை வங்கி ஊடாக மாத்திரமே செலுத்தவும். எமது வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062

நன்றி

எமது முகவரி:
SUVADUHAL
Herslebs Gate 43,
0578, Oslo 5

## நிகழ்வுகள்
## நிகழ்வுகள்
## நிகழ்வுகள்
## நிகழ்வுகள்

நிகழ்வுகள்

* கொக்கட்டிச் சோலையில் தமிழ் மக்கள் நூற்றுக் கணக்கானோர் அரச படைகளால் கொல்லப் பட்டதைக் கண்டித்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒஸ்லோவில் ஊர்வலம் ஒன்று நிகழ்த்தப்பட்டது.

* யாழ் நூலகம் எரிக்கப்பட்டு பத்தாண்டு நிறைந்ததையொட்டி நினைவுகூரல் நிகழ்ச்சி ஒன்று 21.06.91 நிகழ்த்தப்பட்டது. தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தின் நூலகப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் கவிதா நிகழ்வு, எமது சமூகத்தின் சிந்தனைப் போக்கு பற்றிய கலந்துரையாடல் என்பன இடம்பெற்றன.

செய்தியாளன்

### சமுத்திரன் பதில்கள்

அரசியல், சமூகவியல் தொடர்பாக சுவடுகள் வாசகர்கள் எழுப்பிய கேள்விகட்கு சமுத்திரன் அளித்த பதில்கள் அடுத்த இதழில் இருந்து வெளியாகும்.

சுவடுகள்



# - இசையமைப்பாளர் கே.சுந்தர் -

கே.சுந்தர் என்ற பெயர் நோர்வேவாழ் தமிழர்களால் பரவலாக அறியப்பட்ட பெயர். தமிழ் மெல்லிசைப் பாடல்கள் நிகழ்ச்சிகள் மூலம் நாட்டின் சகல பகுதிகளிலும் 'குட்டி மாஸ்ரர்' என்று அறியப்பட்ட இவரை அண்மையில் ஒஸ்லோவில் சந்தித்தேன்.

"எங்கள் குடும்பப் பின்னணிதான் நான் இசைத் துறையில் ஈடுபடக் காரணமாயிருந்தது. எங்கள் பாட்டனார் (அம்மாவின் தந்தை) சுப்பையாதான் இதற்கு அஸ்திவாரம் இட்டார்.

எனது தாயார், தந்தையிடம் மிருதங்கம் பயின்றவர். அந்தக் காலத்தில் பெண்களைத் தொடர்ந்து இசைபயில அனுமதிக்காததால் அவர் இடையில் தனது கல்வியை நிறுத்த வேண்டி நேரிட்டது. தனக்கு நிறைவேறாமல் போன ஆசையை அவர் எம்மீது திணிக்க முயன்றதால்தான் நாங்கள் இசையில் ஈடுபட நேர்ந்தது.

எனது சிறுவயதில் நான் பாட்டனாரிடம் இசைபயின்றபோது, அவர் மரணமானதால் (5ஆம் வகுப்பு பயில்கையில்), அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் சேர்க்கப்பட்டேன். தொடர்ந்து நான் ஆசிரியர் தராதரம்வரை படித்து முடித்தேன். மிருதங்க வித்வானான எனது பாட்டனாரின் சீடரான மகேந்திரனிடம் நான் அதிககாலம் பயின்றேன்.

எனது குடும்பத்தின் மூத்த சகோதரர் காரணமாகத்தான் நான் கிற்றாரில் இறங்க நேரிட்டது. சுயமாக அவ்வப்போது கிற்றாரைத் தட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்த அவர், எனக்கு சில குறிப்புகளைச் சொல்லித் தந்தார். புத்தகங்களும் சிறிது உதவின. நான் சிலருக்கு கிற்றார் பழக்கியபோதுதான் நானே அதிகம் அறிய



நேர்ந்தது. மற்றவர்களது சந்தேகங்களைத் தீர்க்க நான் மேலும் அறியவேண்டிய தேவை ஏற்பட்டது.

பிறகு கண்ணனிடம் இருக்கும்போதே மிக அதிகம் பயின்றேன். தாசீசியஸ், மௌனகுரு, பாலேந்திரா, நிர்மலா நித்தியானந்தன் போன்றோரின் நாடகங்களுக்கு கண்ணன் இசையமைப்பதற்காக நடத்தும் ஒத்திகையே ஒரு பயிற்சியாக இருக்கும்" என்ற சுந்தர் பல வாத்தியக் கருவிகளை தேர்ச்சியுடன் கையாளக்கூடிய திறன்வாய்ந்த கலைஞர்.

"மிருதங்கம் படித்ததால் தபேலா, கெஞ்சிரா, உடுக்கு, டொல்கி, கடம், ஜண்டை என்பன வாசிக்க முடியும். இவை ஒரேவகை என்று சொல்ல முடியாவிட்டாலும் அவற்றுக்கு நாம் பாவிக்கும் வார்த்தைகள் ஒன்றுதான்" என்ற சுந்தர் தனது கருத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கைமூலம் புரிய வைத்தார்.

"கீபோ(ர்)ட் வாசிக்க ஆசைவந்ததற்குக் காரணம், கிற்றாரைவிட கீபோர்ட்தான் பழக்கவோ, மெட்டமைக்கவோ (ஆர்மோனியம்போல) இலகுவானது. இதனாலேயே கீபோ(ர்)ட்டைப் பழகினேன்.

இலங்கையிலுஞ் சரி இங்குஞ் சரி சுந்தர் ஒரு முழுநேர இசைக் கலைஞராக இல்லை, ஏன்?

"ஏனென்றால், வாழமுடியாது. ஆறுமாதம் வருமானம் இருக்கும். ஆறுமாதம் ஒன்றும் இராது. இதனாலேயே யாரும் இசையைப் பழக முன்வருவது குறைவு. பழகுபவர்களும் வீட்டுக்குத் தெரியாமலேயே பழகுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் கலைக்கு மதிப்பு இருக்கிறது, (பணப்) பெறுமதி இல்லை"

தற்போதைய நிலையில் தொடர்ந்து இசையில் நிரந்தரமாக மூழ்கும் எண்ணம் சுந்தருக்கு உண்டு. சுந்தரின் சகோதரர் தமிழகத்தில் ஒரு திரைப்படத்தில் முக்கிய பங்காற்றியதோடு, வளர்ந்துவரும் இசைக் கலைஞராக இருக்கிறார். இவர்மூலம், தான் முன்னேவர முடியும் என சுந்தர் நம்புகிறார்.

சுந்தருக்கும் எல்லாக் கலைஞர்களைப் போலவும் கனவுகள் உண்டு. கோடை காலத்தில் ஈழத்திலும் இங்கும் இயற்றி இசையமைக்கப்பட்ட பாடல்கள் மட்டும் கொண்ட நிகழ்ச்சி ஒற்றை நடத்தவோ, அல்லது இவ்வாறான பாடல்களும் கொண்ட 'வீடியோ அல்பம்' ஒன்றை வெளியிடவோ அவருக்கு விருப்பமுண்டு.

"நாங்கள் முன்னே வருவதானால் சினிமா இசையினூடுதான் முன்னேவர முடியும். ஏனென்றால் எங்கள் பயிற்சி முழுவதும் சினிமாவாகத்தான் இருக்கிறது" என்பது சுந்தரின் கருத்து

சுந்தர் பல பாடல்களை சுயமாக இசையமைத்துள்ளார். அவரது இசையமைப்பு அனுபவங்கள் எப்படி?

"முதலில் இலங்கையில் ஒரு தொலைக்காட்சிப்படம் தயாரிக்கப்பட்டது. அதற்கு பாடல்கள் இசையமைக்கப்பட்டன. அந்தப் படத்துக்குப் பெயரிடப்படவில்லை. யோகேஸ்வரனும் அப்படத்தில் பாடியிருந்தார். ஆனால் அந்தப்படம் பின்னர் வெளிவரவில்லை. இதற்கு நானும் எனது சகோதரரும் இசையமைத்திருந்தோம்.

அடுத்தது 'எல்லைக் கோடுகள்' என்ற படம். இது மினிசினிமாவில் திரையிடப்பட்டது. இதில் இடம்பெற்ற 4பாடல்களில் நான் இரண்டையும் எனது சகோதரர் இரண்டையும் இசையமைத்தோம். இந்தப் பாடல்களுக்கு நல்ல வரவேற்பிருந்தது. ஒலிப்பதிவுக்கான சாதனங்களோ, இடமோ இல்லாமல் நள்ளிரவில் அறையைப் பூட்டிவிட்டு ஒலிப்பதிவு செய்து முடித்தோம். முதற்பாடல் 1983இலும், எல்லைக் கோடுகள் பாடல்கள் 1986இலும் இசையமைக்கப்பட்டன"

இதுவரை சுந்தர் மொத்தமாக 7பாடல்களை இசையமைத்துள்ளார். நீண்ட காலமாகவே எழுதப்பட்ட பாடல்களுக்கு இசையமைப்பதா, இசையமைக்கப்பட்ட மெட்டுக்குப் பாட்டெழுதுவதா என்ற சர்ச்சை இருக்கிறது. இதற்கு சுந்தர் என்ன நினைக்கிறார்?

"இப்போதுள்ள ரசனைப்படி, பாட்டுக்கு மெட்டமைக்க முடியாது. பாகவதர் காலத்தில் பாட்டு சரியாக அமையாவிடில், சங்கீதத்தால் அதை மேவிவிடலாம். பிறகு, கண்ணதாசன் பாட்டெழுதிய காலத்தில் ஒருபாடலின் இசைவடிவம், பாடல் எழுதியபிறகு இசையமைக்க உதவியாக இருந்தது. அந்தப்பாணி- அதாவது அடுத்தடுத்த பந்திகள் ஒரே அமைப்பில் வருவதுபோல்- இப்போது பெரும்பாலும் இல்லை. இப்போதுள்ள பாணியில் எழுதப்பட்ட பாட்டை இசையமைப்பது சிரமம்"

பாடல்கள் கவித்துவமாக வராமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் எனத் தோன்றியது எனக்கு.

(இன்னும் வரும்)



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சுவடுகள்

இலங்கையரசு தனது பேரினவாதத்தின் கொடுங் கரங்களால் யாழ்நூலகத்தின்மீது தீயைப் படரவிட்டுப் பத்தாண்டுகள் நிறைகின்றன. வரலாற்றில் அழிக்கமுடியாத ஒரு துயரக் கறையாக இந்த நிகழ்வு இன்றும் மனதை உலுக்குகிறது.

உலகம் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ ஆயிரம் யுத்தங்கள் நடந்தபோதும் ஈழத் தமிழர்கட்கு எதிரான இலங்கையரசின் யுத்தத்தில்தான் இவ்வாறு ஒரு நூலகம் திட்டமிடப்பட்ட முறையில் அரசபடைகளால் கொழுத்தப்பட்டது. ஒருஇலட்சம் நூல்களுடன் இந்த நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வு தமிழ்மக்கள் மத்தியில் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

யாழ் நூலகம் நூல்களைக் கொண்ட ஒரு கட்டடமாக மட்டும் இருக்கவில்லை. அது ஒரு கலாசார நிலையமாக, அறிவியற் கூடமாக விளங்கியது. யாழ் நூலகத்தைப் பயன்படுத்தி அறிவை வளர்த்தவர்கள் பலதுறைகளிலும் சிறப்பாய் விளங்கினர். இவர்கள் அனைவரும் 1981 மே 31இரவில் தமது அறிவின் கருவூலத்தை கொடுங்கோல் அரசின் தீ நாக்குகளிடம் பலிகொடுத்தனர்.

நூலக எரிப்பு தமிழ்மக்களது வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது எனினும், அதிலிருந்து மீளும் வழிவகைகளைக் கண்டறிவதில் தமிழ்மக்கள் தமது சரியான தடத்தைக் காணவில்லை என்பதே உண்மை. நூலகத்தை அழிப்பதில் அரசின் அக்கறை, தமிழ்மக்களது அறிவுவளத்தை இல்லாது செய்வதாகவே இருந்தது. இவ்வாறான நடவடிக்கைகளின் தொடராகவே பாடசாலைகளையும் அரசு குண்டுவீசித் தகர்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இயற்கை வளங்களோடு தமிழ் மக்களது அறிவும் ஒரு வளமாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் தமிழ் மக்களின்மீது தொடர்ச்சியாக இராணுவ ஒடுக்குமுறை தீவிரமடைந்து வந்தபோது, கல்விக்கான வசதிகள் முற்றிலும் பாதிக்கப்பட்ட ஓர் இனமாகவே எமது இனம் மாறத் தொடங்கியது. தற்போது அமுலில் உள்ள அரசின் கல்வித் திட்டமானது ஆங்கிலேயர் வழியேதான் நம்மிடம் வந்துசேர்ந்தது. இக்கல்வி அமைப்பானது அரசு, தனது நலன்களைப் பேணும் வகையில் உருவாக்கியதொன்று. எனினும், தற்போதைய சூழலில் இதைப் பயில்வதன் மூலமும் எமது இனத்தை முற்றிலும் அறிவற்ற ஒரு சமுகமாக்காது தடுக்க முடியும். இந்தக் கல்வியமைப்பை முற்றாக மாற்றுவது தற்போதைய நிலையில் சிக்கல்களையே தோற்றுவிக்க முடியும். எட்டாம் வகுப்புக்குமேல் கல்வி கற்கக்கூடாது என உத்தரவு இடப்படும் சமுகம் எதிர்காலத்தை எப்படி எதிர்நோக்கும்? பாடசாலை செல்லும் வயதில் சிறுவர்கள் ஆயுதம் ஏந்துவது கவலைதருவது மட்டுமல்ல, எதிர்காலம் பற்றிய அச்சத்தையும் ஊட்டுவது.

நூலக எரிப்பு, வாசிப்புப் பழக்கம் தேய முக்கிய காரணமாக அமைந்தது. பொதுவாக கிராமங்களில் இருந்த நூலகங்களும் தம்மை அபிவிருத்தி செய்யாது வெறும் பத்திரிகைகளின் வாசிகசாலைகளாகவே இருந்தன. நூல்களைத் தேர்வுசெய்து படிக்கும் சந்தர்ப்பம் இல்லாது போனமை கடந்த சில காலங்களாக தமிழ் மக்களிடையே நிலவும் குறைபாடு. வெவ்வேறு கருத்துகள் கொண்ட படைப்புகளும், நூல்களும் வெளிவருவதும் தற்போதைய சூழலில் மிகவும் அவசியமானது. அதற்கான கதவுகள் திறக்குமா என்பதும் கேள்விக்குறியே.

நூலக எரிப்பின்மூலம் அரசு சாதிக்க நினைத்ததை நாமும் செய்துமுடிக்கப் போகிறோமா, அல்லது சாம்பலில் இருந்தும் உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் பறவையாய் எமது தலைமுறையின் அறிவியற் தேட்டத்தை ஈட்டப் போகிறோமா என்று காலம் கேள்வி எழுப்புகிறது.

சுவடுகள் 28
வைகாசி - ஆனி 1991

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway




# திரும்புங்கள் நாட்டிற்கு!

ஐரோப்பிய நாடுகள் தங்கள் எல்லைகளைத் தகர்த்து 'ஐரோப்பிய சமுகம்' என்ற பெயரில் ஒன்றுபட்டுத் தமது நலன்களைப் பெருக்கி, பொருளாதார உலக வல்லரசாகத் திட்டமிட்டு வருகின்றன.

இதற்காக இவை இன்று தம்மிடையே பல உடன்பாடுகளைக் கண்டுள்ளதோடு பல திட்டங்களைத் தீட்டியுள்ளன. அடுத்த வருடம் ஐரோப்பிய நாடுகள் இதற்கு முதல் தம்மை 'சுத்தம்' செய்து கொள்ளவுள்ளன. இதன் ஒருபடியாக இங்கு வாழும் வெளிநாட்டவர் தொடர்பான சில 'முடிவு'களை எடுத்துள்ளதோடு இன்னும் சில முடிவுகளை நடைமுறைப் படுத்தவுள்ளனர். அடுத்த வருடம் முதல் வெளிநாட்டவர் மீது எத்தகைய கெடுபிடிகளைக் கொண்டிருத்தல் என்பது தொடர்பாக விவாதம் தற்போது நிகழ்ந்து வருகிறது. இதற்கு முன்னதாக தற்போது ஐரோப்பாவில் உள்ள அகதிகள் அவரவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட முன்னோடியான சில நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. பொதுவாக ஐரோப்பிய நாடுகள் வெளிநாட்டு அகதிகள் தொடர்பாக கடும் போக்கையே எதிர்காலத்தில் கடைப்பிடிக்கும் என நம்பப்படுகிறது.

இத்தகைய போக்கினால் ஐரோப்பாவில் தஞ்சமடைந்துள்ள பலலட்சம் அகதிகள் தமது நாடுகளுக்குத் திரும்பிச் செல்ல நேரிடும். தம்மை மனிதாபிமானிகளாகக் காட்டிவந்த ஐரோப்பிய சமுகத்தின் உண்மை நிலை, எதிர்வரும் வருடங்களில் மேற்கொள்ளப்பட உள்ள இந்த நடவடிக்கைகளினால் வெளியே தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பா வெளிநாட்டவர் தொடர்பாக மூன்று ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளன.

முதலாவது - அகதிகள் ஒப்பந்தம் அல்லது டப்ளின் ஒப்பந்தம். இது அகதிகளாக யாரை ஏற்றுக் கொள்வது என்பது பற்றியது

இரண்டாவது - எல்லைப் பராமரிப்பு ஒப்பந்தம். இது ஐரோப்பிய நாடுகளினுள் வெளிநாட்டவர் உட்புகுவதைக் கட்டுப்படுத்துகிறது.

மூன்றாவது சேகன் ஒப்பந்தமாகும். இதுவே மிகப் பழைய ஒப்பந்தமாகும். 1985ல் இந்த ஒப்பந்தம் தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன. இது பெனிலுக்ஸ் நாடுகட்கிடையேயும், ஜேர்மனி, பிரான்ஸ் என்பவற்றுக்கிடையேயும் மேற்கொள்ளப் படுவது.

சேகன் ஒப்பந்தம் முதல் தடவையாக 1990ல் கைச்சாத்திடப் பட்டது. இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. விசா நிபந்தனைகள், போலிக் கடவுச் சீட்டுகளுடன் ஆட்களைக் கடத்தல் போன்றவற்றைக் கையாள்வது தொடர்பாக இந்த ஒப்பந்தம் இந்த நாடுகளிடையே இணக்கத்தை ஏற்படுத்தும். ஆயினும் இந்த நாடுகளில் அகதி அந்தஸ்துக் கோரும் ஒருவரின் விண்ணப்பம் தொடர்பாக எந்த நாடு முடிவெடுப்பது என்பது பற்றி இவை இன்னும் இணங்கவில்லை.

சேகன் ஒப்பந்தப்படி இந்த நாடுகட்கிடையே கொம்ப்யூட்டர் அடிப்படையிலான 'செய்தி நடுவம்' ஒன்று உருவாக்கப் படவுள்ளது. இது அரசியல் தஞ்சம் கோருவோரின் சகல விபரங்களையும் மற்றைய நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும்.

இவ்வாறு பலவிதங்களிலும் ஐரோப்பிய எல்லைகள் மூடிக்கொள்வதால் மூன்றாம் உலக நாடுகளில் பெரும் அரசியல் நெருக்கடிகள் நிலவினாலும் அவற்றால் பாதிக்கப் படுவோர் எவரும் தப்பிக் கொள்ள முடியாத ஒரு நிலை தோன்றியுள்ளது.

தீபன்



"புறநானூறு வாசிக்கப் புல்லரிக்குது. அவர்களின் வீரம் இப்பத்தைய தமிழனைப்போல... உமக்கு எப்பிடி இருக்கு?"

"சுத்துமாத்தை நினைக்க சரியான கவலையாயிருக்கு"

"அப்பிடியெண்டா நீர் தமிழனேயல்ல, துரோகி!"

"புறநானூற்றுத் தமிழன் வீரன், இப்பத்தையான் தமிழனும் வீரன் எண்டா இப்பத்தையான் தமிழன் இவ்வளவு அநியாயஞ் செய்யிறானே அப்ப அப்பத்தையான் புறநானூறுத் தமிழன் அநியாயஞ் செய்திருப்பான். அதேன் புறநானூறிலை வரேலை?"

"!!!..."

- தேசபக்தன் -



# தொலைந்துபோன நாட்கள் பற்றிய சில குறிப்புகள்

**தேசப்பிரியன்**



உள்ளூராட்சித் தேர்தல்களில் பெருவெற்றியை ஈட்டிய அரசு, இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தைகட்குத் திரும்புமாறு பகிரங்கமாக புலிகளிடம் அழைப்பு விட்டது. நிபந்தனை அற்ற பேச்சுகட்குத் தாம் தயார் என கூறியிருந்த புலிகளின் கூற்றை மறுக்கும் விதத்தில், புலிகள் அவ்வாறான தமது விருப்பத்தை அரசிடம் நேரடியாகத் தெரிவிக்கவில்லை எனவும், அவ்வாறு கூறும் கடிதம் எதையும் அரசு புலிகளிடம் இருந்து பெறவில்லை எனவும் அரசு உயரதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆயினும் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இரு வெவ்வேறு பேச்சுவார்த்தைகள் நடப்பதாக நம்பப்படுகிறது. இவற்றில் ஒன்றைப் புலிகளே ஒப்புக் கொண்டுள்ளனர். புலிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட, மேற்கு நாடொன்றின் தலைநகரில் இடம்பெறவுள்ள பேச்சுகட்கு முன்னோடியாக யாழ்ப்பாணத்தில் பிரேமதாசவின் ஆலோசகரான பிரட்மன் வீரக்கோனுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சுகள் நடந்ததாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்தமுறை 13 மாதங்கள் பேச்சுகள் நடந்தபோதும் அரசு ஒரு தீர்வை முன்வைத்தோ, புலிகள் ஒரு வரையறையைக் கொண்டோ பேசவில்லை என்பதால் இந்தியப் படைகள் வெளியேறிய சிறிது காலத்திலேயே பேச்சுகள் முறிவடைந்தன.

தற்போதைய பேச்சுகளில் அரசு சமஷ்டித் தீர்வையே முன்வைக்க உள்ளதாக அறியப்படுகிறது. இப்பேச்சுகட்கு அரசையும் புலிகளையும் நிர்ப்பந்திப்பதில் மேற்கு நாடுகள் சில தொடர்ந்தும் அக்கறை காட்டி வருகின்றன.

ராஜீவ் காந்தியின் படுகொலை நிகழ்ந்தபின் தமிழகத்திலும், இந்தியாவிலும் புலிகளுக்கெதிராக எழுந்துள்ள பலமான எதிர்ப்பு அபிப்பிராயம் அவர்கள் தவிர்க்க முடியாமல், தற்காலிகமாகவேனும் இலங்கை அரசுடன் இணக்கம் காணும் அல்லது நல்லுறவை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது. ராஜீவ் படுகொலை செய்யப்பட்டது முதல் தொடர்ச்சியாக இந்திய தொடர்புச் சாதனங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாய்வுத் துறைகளும் புலிகள் மீது இந்தக் கொலைக் குற்றச்சாட்டைச் சுமத்துவதில் ஈடுபட்டுள்ளன. இவற்றைப் புலிகள் நிராகரித்து, கொலை பற்றிய விசாரணையில் ஒத்துழைப்பதாக அறிவித்தபோதும் இப்போதும் முதலாவது சந்தேக நபர்களாகப் புலிகளே உள்ளனர். ராஜீவைக் கொல்வதற்கு (தற்போது) புலிகளுக்குப் பலமான காரணமோ தேவையோ இல்லை எனக் கொண்டாலும், வெளிநாட்டுச் சக்தி ஒன்றின் கைகள் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கலாம்என எழுந்த சந்தேகம் முற்றாகத் தீர்க்கப்படவில்லை.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து அங்குள்ள ஈழத்தமிழ் அகதிகளையும், புலிகளையும் வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க டிட்டணியாலும் அவற்றின் முக்கிய தலைவர்களாலும் எழுப்பப்பட்டது. தமிழ்நாடு தேர்தலில் அதிமுக பெற்ற பெருவெற்றியின் பின்னர் அதன் தலைவி ஜெயலலிதா புலிகளை வெளியேற்றியே தீருவேன் என உறுதியாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் எம்ஜிஆர் அரசு இருந்தபோதும், பின்னர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபோதும் தமிழக அரசுடன் புலிகள் நல்லுறவையே கொண்டிருந்தனர். எனவே அவ்வாறான உறவை நிலைநிறுத்துவதில் புலிகளுக்கு அவ்வளவு சிரமம் இருக்காது. தற்போது உள்ள நெருக்கடி சிலகாலம் மட்டுமே இருக்கக்கூடியது. ஆனால் இந்திரா காங்கிரசுடன் புலிகள் நல்லுறவைக் கொண்டிருக்கவில்லை. இது தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகட்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

*அண்மையில் பிரான்சின் 'எல்லைகளற்ற மருத்துவர்' (MSF) அமைப்பின் அடையாளமிடப்பட்ட வாகனமொன்று வானத் தாக்குதலுக்கு உள்ளாகியதும், அதன்பின் மன்னார்ப் பகுதியில் நிவாரண உதவிகள் முற்றாக நிறுத்தப்பட்டதும் பழைய செய்திகள். இதுபற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு விசாரணை முடிவுகள் வெளியாகியுள்ளன. விமானப்படையிடம் தூரநோக்கிகள் (Binaculars) இல்லையெனவும், பாதுகாப்பு எல்லைக்குள் வந்ததாலேயே சுடு விழுந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இது ககாக்கட்டிச்சோலை ஆணைக்குழு பற்றியும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.*

*வடக்கு- கிழக்கில் நிகழும் மோதல்களுக்கிடையே புலிகளால் முத்தமிழ் விழாவொன்று வடக்கே நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவில் நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் பிரபாகரன் பகிரங்கமாகத் தோன்றி உரையாற்றியதாகவும், இவ்விழாவில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.*

*தற்போது தென்னிலங்கைப் பத்திரிகைகளில் சிங்கள, பௌத்த பேரினவாதத்துக்குச் சார்பான ஆக்கங்கள் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளன.*

இலங்கையில் அரசும் புலிகளும் பேச்சுகளை ஆரம்பிக்கும் போக்கு நிலவினாலும் ராணுவத் தாக்குதல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவு தீவிரம் பெற்றுள்ளன. கிழக்கில் கொக்கட்டிச் சோலையில் 150க்டு மேற்பட்ட தமிழ் மக்கள் படையினரால் கோரத்தனமாகக் கொல்லப் பட்டுள்ளனர். புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றின் பின்பே இந்த நடவடிக்கையை அரச படைகள் மேற்கொண்டுள்ளன. பெண்கள், சிறுவர், வயோதிபர் உட்பட கொல்லப்பட்ட பலரின் சடலங்களை படையினர் தீயிட்டுள்ளனர். இதே கிராமம் 1985ல் இதே முறையில் தாக்கப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப் பட்டிருந்தனர்.

இலங்கைக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக்குழு விஜயம் மேற்கொண்டபோதே இந்தச் சம்பவம் நடந்தது. யூன் 15ம் திகதியன்று சபை தனது விசாரணைகளை முடித்துக்கொண்டு வெளியேறியது. இந்தத் தூதுக்குழு வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவில்லை. குழு இலங்கையில் தங்கியிருந்தபோது அரசின் உளவுப் படை ஒன்று தொலைபேசி மிரட்டலில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது.

கொக்கட்டிச்சோலை சம்பவம் பற்றி விசாரிக்க அரசு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது. ஆனால் இந்த ஆணைக்குழு முடிவுகள் வெளிவருமா என்பதும், முடிவுகள் தமிழ் மக்களைத் திருப்தி அடையச் செய்யுமா என்பதும் சந்தேகமே என வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

*லண்டனில் இருந்து வெளியாகும் 'Tamil Times' சஞ்சிகையின் ஆசிரியரான ராஜநாயகம், மனித உரிமை மீறல்களுக்கெதிராகப் போராடிவரும் மஹிந்த ராஜபக்ஷ (பா.உ)வுடன் பாராளுமன்றம் சென்றதையடுத்து பாராளுமன்ற வட்டாரங்களில் பெரும் சர்ச்சை தோன்றியுள்ளது. ராஜநாயகம் புலிகளின் சார்பானவர் என்றே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.*

*இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியபோதும் போதிய பெரும்பான்மை கொண்டிராததால் சில இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. தமிழ்நாட்டில் அதிமுக பெருவெற்றி அடைந்து ஜெயலலிதா ஆட்சி அமைத்துள்ளார். முன்னாள் முதல்வர் கருணாநிதி மட்டுமே திமுக சார்பில் வெற்றி பெற்றார். இவரும் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

## ராஜீவ் படுகொலை

*இந்தியத் தேர்தல் பிரசாரங்களில் ஒரு கட்டமாக தமிழகத்தில் ஸ்ரீபெரம்புதூரில் நிகழ்ந்த கூட்டமொன்றில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இடையில் குண்டொன்றைச் சுமந்த பெண்ணினால் கொல்லப் பட்டுள்ளார். இச்சம்பவத்தில் மேலும் பலர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட ஒரு புகைப்படக்காரரின் புகைப்படங்களில் இருந்து இந்தியப் புலனாய்வுத் துறையினர் துப்புத் துலக்கியதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்கள் சிலர் உட்படப் பலர் கைதாகியுள்ளனர்.*



## கொழும்பில் குண்டுவெடிப்பு

*கொழும்பு முப்படைகள் கூட்டுத் தலைமையகத்தின் முன்பாக நிகழ்ந்த கார்க்குண்டு வெடிப்பு ஒன்றில் 22பேர் வரை கொல்லப்பட்டனர். இச்சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என அரச குற்றம் சாட்டியுள்ளது. குண்டுவெடிப்பில் கொல்லப் பட்டோர் பெரும்பாலும் படையினர் எனத் தெரியவருகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யூன் மாதம் 12ம் திகதி ஒரு தலைசிறந்த தமிழ் ஆசானை இந்த உலகம் இழந்தது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தமிழாற்றலும், ஆர்வமும் கொண்ட மாணவர்கள் நூற்றுக் கணக்கானோரை உருவாக்கிய கவிஞர் செ.கதிரேசர்பிள்ளையின் மரணம் அன்று நிகழ்ந்தது.*

## வயற்காற்றுச் சுமந்துவரும் வளமான தமிழ் மணம்

விஜயேந்திரன்

மகாஜனக் கல்லூரியின் வரலாற்றில் தமிழ் ஆற்றல் மிக்க பலர் உருவாகியுள்ளனர். இவர்கள் உருவாகும் வகையிலான இலக்கியச் சூழல் கல்லூரியில் நிலவ, கல்லூரியை நிறுவிய பாவலர் துரையப்பாபிள்ளை மட்டுமன்றிக் காலம் காலமாக கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களும் காரணமாக இருந்தனர். கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை இவர்களுள் குறிப்பிடத்தக்க இடம் வகித்தவர்.

நிமிர்ந்த நடையும் நேர்த்தியான வெண்ணிறத் தேசிய உடையுமாய் கல்லூரி வளாகத்தினுள் உலவிவரும் அவரது கம்பீரமான குரல் இப்போதும் என் செவிப்பறைகளில் மோதிக் கொண்டிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கற்பித்தல் என்பது பணம் பண்ணும் ஒரு காரியமாக ஆகத் தொடங்கிய பின்னரும் சில ஆசிரியர்கள் தம்மை மாணவர்களுக்காக அர்ப்பணித்தனர். இவர்களது வாழ்வு பெரும்பாலும் கல்லூரியையோ அல்லது அவர்கள் கற்பித்த கல்வி நிறுவனங்களையோ சுற்றியே இருக்கும். அவ்வாறு வாழ்ந்தவர் கதிரேசர்.

பாடசாலை தொடங்கும் நேரங்களில் கலகலத்து வரும் மாணவர்கள், அவரது சைக்கிள் அருகில் வருகிறபோது மௌனம் கொள்வர். மௌனமாகவும் கம்பீரமாகவும் கடந்துபோகிற அவரைப் பார்க்கிற மாணவர்களுக்கு அமைதி பூண்ட தமிழ்ப் பாட வகுப்பறைகள் நினைவு வரும்.

மாணவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதில் அவரது பண்பு உயரியது. தான் புறவாழ்விலும், கல்லூரியிலும் கொண்டிருந்த ஒழுக்கக் கோட்பாட்டை மாணவர்கள் பின்பற்ற வழிகாட்டியவர் அவர். இதற்காக அவர் பூண்டிருந்த கண்டிப்பு வேடத்தினுள் கருணை உயிர்ப்போடிருப்பது.

கல்லூரியின் கலை, இலக்கியத் துறைகளில் தானே ஒரு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் அவர். இதிகாசங்களில் குறிப்பாக மகாபாரதத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆற்றலும் இணையற்றவை. அவரது வகுப்பறைகளில் இதிகாசக் கதாபாத்திரங்கள் உயிரோடியங்குபவை.

மாணவர்கள் தாமே கதாபாத்திரங்களாக மாற வழிசமைத்த அவரது நாடகங்கள் ஐந்து அகில இலங்கை ரீதியில் நிகழ்ந்த போட்டிகளில் தொடர்ச்சியாக முதலிடம் பெற்றுக் கல்லூரிக்குப் புகழ் ஈட்டித் தந்தவை. மகாபாரதத்தின் கிளைக் கதைகளைப் பின்னணியாகக் கொண்ட இந்த நாடகங்களை 'பாரதம் தந்த பரிசு' என்ற பெயரில் நாடகத் தொகுதியாக்கிப் பெருமை கண்டனர் அவரது பழைய மாணவர்கள். இதுதவிர அவரது மிக நீண்ட கால இலக்கிய வரலாற்றில் அவர் படைத்த படைப்புகள் பல தொகுக்கப் படாமல் உள்ளன. இதை இன்றைய சூழலில் யார் செய்யப் போகிறார்கள்?

யுத்தம் வாழ்வாகிப் போன இன்றைய யாழ்ப்பாணச் சூழலில் நோயுற்றிருந்த ஆசிரியரின் மரணம் நிகழ்ந்தது. அவரது

(தொடர்ச்சி [illegible]ம் பக்கம்)

## எங்கே என் 'வெல்லி'?

நட்சத்திரங்கள்.... தன்பாட்டில் வானில் திரிவன. ஊர்வலமாய்.... தோரணமாய் தெரிவன.

குழந்தைகளைப்போல் கொஞ்சிச் சிரிப்பன. எல்லாக் குழந்தைகளையும் போலவே நானும் நட்சத்திரத்தைப் பார்ப்பேன். பெரிய 'ரொக்கற்'றில் ஏறி ஒருநாள் அவற்றுக்குக் கிட்டப் போவேன். பயமாயிருந்தாலும் கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டு விரல் இடைவெளிகளுக்கூடாக மெதுவாகப் பார்ப்பேன். மேகம் தெளிவாயிருந்தால் அவற்றை எண்ணலாம். ஒருநாள் நான் எண்ணினேன். ஆனால் 127க்குமேல் எண்ணமுடியவில்லை. எண்ணியவற்றையே திரும்ப எண்ணுகிறேனோ எனச் சந்தேகம் வந்தது. அதோடு 500க்குமேல் எண்ணவும் எனக்குத் தெரியாது.

எங்கடை வீட்டுக்கு வந்த ஒரு மாமா தனக்கு நட்சத்திரங்களைத் தெரியும் என்றார். நானும் தெரியும் என்றேன். அவர்

**க.ஆதவன்**
**(23.05.91)**

அவற்றுடன் கதைத்தேன் என்றார். நானும் கதைத்தேன் என்றேன். என்னைப் பார்த்து அவர் சிரித்தார். நான் ஏதோ பொய் சொல்கிறேன் என நினைத்து.

முந்தி ஒருநாள் நாங்கள் இலங்கையிலை இருக்கேக்கை பிள்ளையார் கோயில் திருவிழாவுக்குப் போட்டு வரேக்கை நல்ல இரவு. நாங்கள் பனைமரங்களுக்கூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து வந்தம். எனக்கு நல்ல நித்திரை வந்தது எண்டாலும் நட்சத்திரங்களைப் பாக்கிற ஆவலாலை நித்திரை கொள்ளேல்லை. என்ரை அப்பா என்னைத் தூக்கித் தன்ரை தோளிலை இருத்தினார். அப்ப நான் பாரமில்லை. இப்ப கொஞ்சம் கொழுத்திருக்கிறன் எண்டு அம்மா சொன்னவ. அப்பா கொஞ்சம் தொங்கித் தொங்கித்தான் நடப்பார். நான் தோளிலை இருந்தபடி அண்ணாந்து பார்த்தபடி நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டு வந்தன். அப்பான்ரை ஒவ்வொரு தொங்கலுக்கும் நட்சத்திரங்களும் கிட்ட வந்தும் தூரப்போயும் கொண்டிருந்தன. நட்சத்திரங்களை 'வெள்ளி' எண்டும் சொல்லலாமாம். எனக்கு வெள்ளி எண்ட பெயரிலை அவ்வளவு விருப்பம் இல்லை. அதுக்கொரு காரணமும் இருக்கு. நான் ஆகவும் சின்னனா இருக்கேக்கை வெள்ளி எண்டுறதை 'வெல்லி' எண்டுதான் சொல்லுவனாம். எவ்வளவுதரம் சொல்லிப் பார்த்தாலும் வெல்லி எண்டுதான் எனக்கு வந்தது. பிறகு 'நட்சத்திரம்' எண்ட பேரைக் கேள்விப்பட்ட உடனை அதைச் சொல்ல ஆரம்பிச்சிட்டன். அதுவும் சொல்லக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. 'நச்சசித்திரம்' எண்டுதான் வந்தது, பிறகு ஒருமாதிரிப் பழகிட்டன். இலங்கையிலை எங்கடை வீடு நல்ல பெரிய வீடு. பின்விறாந்தையிலை படிகள் செய்து ஏணிபோல ஒன்று இருக்கும். அதிலை ஏறிப் போனா ஒரு சின்ன மொட்டை மாடிமாதிரி இருக்கும். புழுக்கமான காலத்திலையும் திருவிழாக் காலத்திலையும் நாங்கள் அங்குதான் படுப்பம். திருவிழாக் காலத்திலை யாழ்ப்பாணத்துச் சின்னம்மா சித்தப்பா பிள்ளையள் வந்து எங்கடை வீட்டிலை நிப்பினம். அப்ப எல்லாருக்கும் இடம் காணாதுதானே!

எனக்கு மொட்டை மாடியிலை படுக்க நல்ல ஆசை. ஆனா அப்பா அல்லாட்டி அம்மா கட்டாயம் பக்கத்திலை வந்து படுக்க வேணும். எனக்குப் 'பே'யுக்குச் சரியான பயம். அது மேலாலை வந்து என்னைத் தூக்கிக் கொண்டுபோய் சுடலை மடத்திலை வழத்திக் கொஞ்சம் கொஞ்சமா இரத்தம் எல்லாத்தையுங் குடிச்சுப்போடும். அப்பா அல்லாட்டி அம்மா படுத்திருந்தா 'பே' வராது. அவையின்ரை உடம்பிலை என்ரை ஒரு காலைப் போட்டுக்கொண்டு நிமிர்ந்து படுத்துக் கொண்டு 'நட்சத்திரங்களை'ப் பார்ப்பேன். எங்கடை மொட்டைமாடிக்குப் பக்கத்திலை 2 தென்னை மரங்கள் நிக்குது. ஒண்டு கொஞ்சங் கட்டை மற்றது உயரம். கட்டையான மரத்தின்ரை கடைசி ஓலையின்ரை நுனியை என்னாலை தொட ஏலும். உயரமான மரத்திலை கனக்க இளநீர் இருக்கும். அப்பா ஒரு சின்னக் கொக்கத்தடியாலை பிடுங்கி வெட்டித் தருவார். தென்னோலையளுக்கூடாக நான் நட்சத்திரங்களைப் பார்ப்பேன். சில நட்சத்திரங்கள் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடும். காற்றில் ஓலை ஆடியவுடன் தலையை வெளியே நீட்டிக் 'கண்டேன்' என்று சொல்லும். பின்னர் தலையை உள்ளே இழுத்து ஒளிந்துகொள்ளும். அடுத்த காற்று வரும்வரை காத்திருக்கவேணும். காற்றும் வரும், ஆவலுடன் தேடிப் பார்த்தால் ஒரு பெரிய முகிலுக்குள் நட்சத்திரம் ஒளிந்துவிடும். அந்த முகில் விலக கனக்க நேரம் எடுக்கும். அதற்கிடையில் நான் நித்திரையாகிவிடுவேன்.

அன்றும் அப்படித்தான். நான் நன்றாகத் தூங்கிவிட்டேன். திடீரென ஒரு சிரிப்பொலி கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! தென்னோலைக்குப் பக்கத்தில் ஒரு நட்சத்திரம் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. தலை மட்டும் நட்சத்திரம் போல இருந்தது. நெஞ்சு, வயிறு ஒன்றும் இல்லை. ஆனால் நீண்ட கால்களும் கைகளும் இருந்தன. கால்கள் கழுத்தில் இருந்து முளைத்திருந்தன. கைகள் தலையில் இருந்து முளைத்திருந்தன. பெரிய முழிக் கண்களால் சிமிட்டிக் கொண்டும், ஒரு கையால் தென்னோலையின் நுனியைப் பிடித்துக் கொண்டும் அழகாக ஒரு 'போஸ்' கொடுத்துக் கொண்டு நின்றிருந்தது.

"என்னையா தேடிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது. அட! அதற்குப் பேசக்கூட வருகிறதே.

"ஓம்" என்றேன் அமைதியாக.

"முகில் கூட்டம் இல்லாவிட்டால் நான் எப்போதும் உன் கண்ணுக்குத் தெரிவேன்" என்றது.

"என்னுடன் ஒளிச்சுப் பிடிச்சு விளையாட உனக்கு ஆசையா" என்று கேட்டேன்.

"ஓம்" என்று சொன்னது. ஆனால் வெட்கத்தால் அதன் முகம் சிவப்பாவதைக் காணக்கூடியதாக இருந்தது.

"நீ ஏன் தூரத்திலிருக்கிறாய்?"

"இலலையே உனக்குப் பக்கத்தில்தானே நிற்கிறேன்"

"எங்கள் வீடும், எங்கள் தென்னை மரங்களும் உனக்குப் பிடித்திருக்கிறதா?" எனக் கேட்டேன்.

"ம்... அதனால்தானே ஒவ்வொரு நாளும் உன்னைப் பார்க்க வருகிறேன்" என்றது ஒருவித அசட்டையுடன்.

"ஒவ்கவாரு நாளும் என்னைப் பார்க்க வருவாயா?"

"வானம் தெளிவாக இருக்கவேண்டும். நீயும் மொட்டை மாடியில் படுத்திருக்க வேணும். தென்னை மரங்களும் என்னை வரவேற்க வேணும். வேறு யாரும் என்னைத் தொந்தரவு செய்யாதிருக்க வேணும். இவை யாவும் சரியென்றால் ஒவ்வொரு நாளும் நான் வருவேன்" என்றது.

எனகக்கு ஒரே குதுாகலமாய் இருந்தது.

எட்டி அதன் மூக்கில் கிள்ளவேண்டும் போல் இருந்தது.

உன்னை என்னால் தொடமுடியுமா?" என்று கேட்டேன். ஒன்றும் பேசாமல் முழிக்கண்களை மூடிக்கொண்டு மௌனமாக நின்றிருந்தது.

"உன்னை என்னால் தொடமுடியுமா?" சற்றுப் பெரிதாகக் கேட்டேன். நாணத்தால் அதன் முகம் நன்றாகச் சிவப்பதைக் காணக் கூடியதாயிருந்தது. என்னுடைய கையை நீட்டி எட்டி அதன்



## ஆ(ர்)ண மிர்டால்!

*"நான் நிர்வாகக் குழுவில் இருந்து விலகியபின் வெளிநாட்டவர்க்கு எதிரான மக்கள் இயக்கம் (FMI) நித்திரை செய்யும் நிறுவனமாக உருமாறிவிட்டது" என இவ்வமைப்பின் முன்னாள் தலைவர் ஆர்ன மீர்டால் தெரிவித்துள்ளார்.*

*இவர் தற்போது தனது சொந்த அமைப்பாக 'வெளிநாட்டவர் குடிவருகைக்கு எதிரான நோர்வேஜியர்கள்' (Nordmenn mot Invandring) எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார்.*

*- குகன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்தை தடவுவதற்காகக் கையை நீட்டினேன். எனக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. தலை சுற்றுவதுபோல் பட்டது. உலகமே சுற்றுவதுபோல் பட்டது. நட்சத்திரத்தைக் காணவில்லை. ஆனால் பெரிய சிரிப்பொலி மட்டும் 'உன்னை ஏமாற்றிவிட்டேனே' என்று நகையாடியபடி காதுகளுக்குள் கேட்டுக் கொண்டிருந்தது.

வானத்தைப் பார்த்தேன். எங்கும் கும்மிருட்டாய் இருந்தது. முகில் கூட்டங்கள் முற்றாகவே வானத்தை அடைத்துக் கொண்டிருந்தன.

00000

டெனிஷ் அன்ரி பாட்டுச் சொல்லித் தந்துகொண்டிருந்தா. எனக்கு பெரிசாகப் பாட வெக்கமாயிருந்தது. மற்ற டெனிஷ் பிள்ளையள் பாகுவதுபோலக் கத்திக் கொண்டிருந்தினம். என்ரை 'கின்டகாடின்' (Kindergarden) ஸ்கூல் 'ரவுணு'க்கை இருக்குது. எல்லாப் பிள்ளையளும் கையைக் கோத்துக் கொண்டு பாடிக்கொண்டு இருக்கும். 'கிறிஸ்டீனா' எண்ட டெனிஷ் பொம்பிளைப் பிள்ளை எப்பவும் என்ரை கையைப் பிடிச்சுக்கொண்டு பாட்டுப் பாடவரும். அதுக்கு வெக்கம் இல்லை. எனக்குச் சரியான வெக்கம். நான் ஒதுங்கி நிண்டாலும் அது என்ரை கையை இழுத்துக் கோத்துக் கொள்ளும். ஒவொரு நாளும் எங்கடை ஸ்கூல் முடியேக்கை நாங்கள் பாட்டுப் பாடுவம். பாடத் தொடங்கின உடனையே ஸ்கூல் முடியப் போகுது எண்டு தெரியும். வேலை முடிஞ்சு வாற வழியில என்னையுங் கூட்டிக் கொண்டுபோக அப்பா வாசலில நிப்பார் எண்ட ஞாபகமும் வரும். அப்ப என்னாலை பெரிசாப் பாட ஏலாதுதானே! அண்டைக்கு அப்பா கொஞ்சம் களைச்சுப்போய் வந்திருக்கிறார் அபால தெரிஞ்சுது. வழக்கமா எனக்குச் 'சொக்கிலேட்' வாங்கிக் கொண்டு வாறவர். - அண்டைக்கு அதையும் மறந்திட்டு வந்திருக்கிறார். 'சைக்கிளிலை' போகேக்கையும் அப்பா ஒண்டுங் கதைக்கேல்லை. ஏனெண்டு தெரியேல்லை. நான் கேக்கவும் இல்லை. வீட்டைபோன உடனை T.Vலை 'கார்ட்டூன்' படம் போட்டுப் பாத்தன்.

இரவு ஏழு மணிபோல அம்மா வந்தா. அம்மா வந்தவுடனை அப்பா எழும்பிப் போய் மேசையிலை இருந்த கடிதத்தை எடுத்து அம்மாட்டைக் குடுத்தார். அம்மா வாசிச்சா. வாசிச்சவுடனை அம்மாவும் ஒரு மாதிரியா மாறிப் போனா. அம்மா சோபான்ரை மூலையிலை தொப்பெனக் குந்தி இருந்தா. நான் மெதுவா அம்மாட்டைப் போனன். அம்மான்ரை மடியிலை ஏறினன். அம்மான்ரை கன்னத்திலை ஒரு 'உம்ம்ம்மா'க் குடுத்தன்.பிறகு கேட்டன்.

"என்னம்மா நடந்தது?" என்று.

"அங்கை இலங்கையிலை எங்கடை வீட்டுக்கு 'பொம்' போட்டு வீடு, தென்னை மரங்கள் எல்லாமே அழிஞ்சு போயிட்டுதாம்" என்று சொன்னா.

எனக்கு ஒரு மாதிரியாய் இருந்தது. நெஞ்சுக்குள்ளை என்னமோ செய்யுறது மாதிரிக் கிடந்தது, கதவைத் திறந்துகொண்டு வெளியிலை ஓடினன். அம்மா அப்பாவும் பின்னாலை ஓடிவந்தினம். நான் ஓடிப்போய் வானத்தை அண்ணாந்து பாத்தன். ஒரே கும்மிருட்டா இருந்துது. ஒரே குளிராகவும் இருந்துது. எனக்குத் தலை சுத்திறது மாதிரியுங் கிடந்துது. திரும்பி வீட்டுக்குள்ளை ஓடிவந்தன். என்ரை கட்டிலிலை போய்ப் படுத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தன். கண்களை இறுக்க மூடிக் கொண்டன்.

"வானம் தெளிவாக இருக்கவேணும். நீயும் மொட்டை மாடியிலை படுத்திருக்க வேணும்.

தென்னை மரங்களும் என்னை வரவேற்கவேணும்.

யாரும் தொந்தரவு செய்யாதிருக்க வேணும். இவையெல்லாம் சரியெண்டா ஒவ்வொரு நாளும் நான் வருவேன்" கண்களைத் திறந்து பார்த்தன். அந்த நட்சத்திரத்தின்ரை சிரிப்பொலி மட்டும்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

எனக்குத் தெரியாம என்ரை கண்ணிலை இருந்து கண்ணீர் வந்தது. அம்மா வந்து என்னைத் தூக்கினா அவான்ரை கண்களும் சாடையா நனைஞ்சிருக்கிறது மாதிரிக் கிடந்துது. அப்பா சிகரெட் குடித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தார்.





## பாலியல் கம்பியூட்டர்கள்

ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஸ்கன்டினேவிய நாடுகளில் பாலியல் தொடர்பான திரைப்படங்கள், வீடியோ, புத்தகங்களுக்கு கட்டுப்பாடுகள் நிலவுகிறது. அதிலும் குறிப்பாக நோர்வேயில் அக் கட்டுப்பாடு அதிகமாகும். நோர்வேயில் விபச்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. நோர்வே தொலைக் காட்சியிலும் பாலியல் திரைப்படங்கள் காட்டப்படுவதற்கு அனுமதியில்லை.

இதுதொடர்பாக தற்போது புதிய தலையிடியைக் கம்பியூட்டர்கள் தோற்றுவித்துள்ளன.

'டெலி' தொழில்நுட்பம் சட்டவிரோதமாக பாலியல் படங்களை எல்லைகளைத் தாண்டி குறைந்த நேரத்தில் இறக்குமதி செய்துவிடுகிறது.

நோர்வேயில் தொலைதொடர்பு நிலையம் இத்தகைய கடத்தலை தடுத்து நிறுத்துவதற்கு எந்த வழிவகைகளும் இல்லாமல் திணறுகிறது. பொலிசாராலும் இதைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

'டெலி' போக்குவரத்தை கட்டுப்படுத்துவதோ, கண்காணிப்பதோ இலகுவான காரியமல்ல.

அண்மையில் அமெரிக்காவில் கூட ஒரு பிரச்சனை உருவாகியது. 'டெலி' போக்குவரத்தை தடைசெய்யவேண்டும் என்று 'தேசியபாதுகாப்பு சபை' முயற்சி செய்தது. ஆனால் இதற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பவே இம் முயற்சி கைகூடவில்லை.

கம்பியூட்டர் புரோகிராம்கள் இலகுவில் பிரதி செய்து கொள்ளமுடியும். அத்தோடு பிரதி செய்யப்படும் போது அதன் தரம் குறைந்து விடுவதில்லை. இன்று வீட்டுக்கு வீடு கம்பியூட்டர்கள் வழக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் கம்பியூட்டர்'பாலியல் படங்கள்' இளைய சமுதாயத்தை நாசம் செய்துவிடும் எனப் பெற்றோர் பலத்த கவலை கொண்டுள்ளனர்.

சேதுபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* CDகள் *
* வீடியோ பிரதிகள் *

* தமிழ்த் திரைப்படங்களின் 'ஒரிஜினல்' பிரதிகளை நேரடியாக இந்தியா இலிருந்து தருவித்து நோர்வேயில் விற்பனை செய்பவர்கள்

* தமிழ்த் திரைப்படப் பாடல்களை உயர்ந்த தொழினுட்பத்தில் பதிவுசெய்யும் நியுயோர்க் நிறுவனத்தினமிருந்து நேரடியாக CDக்களை இறக்குமதி செய்து விற்பனை செய்பவர்கள்

NORWAY TAMIL VIDEO
GRASTEN VEIEN 7
1157 OSLO-11

மறவாதீர்கள்— தரமான திரைப்படப் பிரதிகட்கும் உயர்தர CDபிரதிகட்கும் நோர்வேயில் ஒரே விற்பனைப் பிரதிநிதிகள்

NORWAY TAMIL VIDEO.

தொலைபேசி இல. 02/ 745685.

*எமது நிறுவனம் சட்டரீதியாக வீடியோ, CD பிரதிகளை விற்பனை செய்ய அனுமதி பெற்றது என்பதை நினைவுபடுத்துகிறோம்.*





# பாதி மறக்கப்பட்ட ஆயுதக்கிளர்ச்சி



## ஜே.வி.பி.யின் தற்கொலை

இலங்கை 'சுதந்திரம்' அடைந்த பிறகு, 'ஜனநாயக' அரசுக்கெதிராக நடாத்தப்பட்ட முதலாவது ஆயுதக்கிளர்ச்சி நிறைவுற்று 20வருடங்கள் ஆகின்றன. இக்கிளர்ச்சியின் பின் இன்றுவரை இலங்கை பலவித ஆயுதம் ஏந்திய போராட்ட வடிவங்களைப் பார்த்துள்ளது. கடைசியில் ஆயுதமில்லாத இலங்கையைக் கற்பனைசெய்து பார்ப்பதுகூடச் சிரமம் என்ற நிலை தோன்றியுள்ளது.

தற்போது மிக அதிகளவில் நவீன ஆயுதங்கள் நிறைந்து, ஒரு 'ஆயுத வழமை' இலங்கையில் நிலவினாலும், 20வருடங்கள் முன்னர் திடீரென எழுந்த ஆயுதக் கிளர்ச்சியும் அதன் பின்விளைவுகளும் மனதிலிருந்து மறைய முடியாதவை.

ஜே.வி.பி. எனப்படும் (மக்கள் விடுதலை முன்னணி) அமைப்பின் 1971 ஏப்ரல் மாதக் கிளர்ச்சி றோஹண விஜேவீரவால் தலைமை தாங்கப்பட்டது. அதற்கு முந்தைய சிலவருடங்கள் தலைமறைவாக வளர்க்கப்பட்ட ஜே.வி.பி. ஒரேதினத்தில் நாட்டின் பலபகுதிகளிலும் அரசின் காவல், இராணுவ நிலையங்களைத் தாக்கி அழிப்பதன்மூலம் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என நம்பியது. 1971 ஏப்ரல் 5ஆந்திகதி தொடங்கப்பட்ட இத்திடீர்த் தாக்குதல் ஆரம்பத்தில் சில வெற்றிகளைக் கொடுத்தாலும், சிறிது காலத்திலேயே அப்போதைய அரசால் இந்திய உதவிகொண்டு முறியடிக்கப்பட்டது.

ஏப்ரல் கிளர்ச்சியும், ஜே.வி.பி.யும் இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் எதிர்பாராத மாற்றம் ஒன்றைக் கொண்டுவர முயன்றது. எனினும் கிளர்ச்சிக்காக அவ்வமைப்புக் கொண்டிருந்த தந்திரங்களும், கையாண்ட நடைமுறைகளும் அமைப்பையும் நாசமாக்கி, புரட்சியின்மீது மக்கள் கொண்ட நம்பிக்கையையும் சிதறடித்தது.

ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்னர் ஜே.வி.பி. ஏராளமான இளைஞர்களை அணிதிரட்டி இராணுவப் பயிற்சி வழங்கிய போதும், ஜே.வி.பி. மக்களிடம் அரசியல் ரீதியான எழுச்சியையோ உணர்வையோ ஊட்டவில்லை. மத்திய அரசை நிலைகுலையச் செய்து, ஆட்சியைக் கைப்பற்றினால் அடிப்படை மாற்றங்கள் யாவற்றையும் கொண்டுவர முடியும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பி. நம்பியது. இதனால் மக்கள் கிளர்ச்சிக்குத் தயாராக இல்லாமல் இருந்ததோடு, ஜே.வி.பி.யும் கிளர்ச்சிக் காலத்தில் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, ஆபத்தான நிலைமைகளில் தன்னையே காப்பாற்ற முடியாமல் அழிவுகளைச் சந்தித்தது.

ஜே.வி.பி. கிளர்ச்சி நடாத்தத் தீர்மானித்த காலமும் மிகவும் தவறான கணிப்பிலேயே திட்டமிடப்பட்டது. 1970இல் நாட்டின் பல பகுதிகளிலும் பெருவெற்றியீட்டி ஐக்கிய முன்னணி (சுதந்திரக்கட்சி, கொம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக்கட்சி) பதவியேற்ற நேரம். இந்தப் புதிய அரசு தனது திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய குறுகிய காலத்திலேயே ஜே.வி.பி. தனது கிளர்ச்சியை நடாத்தியது. மக்கள் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா என்றே அறியாத நிலையில், கிளர்ச்சிக்கான தேவையைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில், தமக்கு அவர்களது ஆதரவு கிடைக்கும் என ஜே.வி.பி.யினர் கணிப்பிட்டது அவர்களது கிளர்ச்சி படுதோல்வியில் முடியக் காரணமாயிற்று.

பெருமளவில் வேலையற்ற சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கவர்ந்த ஜே.வி.பி, பல்கலைக்கழகங்களிலும் தனது மறைவிடங்களை அமைத்தது. ஜே.வி.பி. கிளர்ச்சியில் தோல்வி கண்டபோது பல பல்கலைக்கழக மாணவர்கள் கைதாகினர். அவர்களிடமிருந்து சீருடைகள் மற்றும் பல முக்கிய பொருட்கள் அரசபடைகளால் கைப்பற்றப்பட்டன. ஜே.வி.பி. தனது கிளர்ச்சியில் நாட்டு வெடிகுண்டுகள், கைக்குண்டுகள், துப்பாக்கிகள் என்பவற்றைப் பாவித்தது. அரச படைகளிடமும் அப்போது நவீன ஆயுதங்கள் இருக்கவில்லை. திடீரெனத் தாக்குதல் நடாத்தப் பட்டதால் பல பொலிஸ் நிலையங்கள் ஜே.வி.பி. வசமாகின. தென்னிலங்கையின் கணிசமான பகுதிகளை ஜே.வி.பி. தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. ஆயினும் தலைநகரையும், அரசையும் அதன் தொடர்புச் சாதனங்களையும் அதனால் கைப்பற்ற முடியவில்லை. அப்போது இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் நெருக்கமான நல்லுறவு நிலவியமையால் இந்தியா, இலங்கை அரசைக் காப்பாற்ற உதவியது.

கிளர்ச்சி தோல்வியில் முடிந்தபோது ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலரும் கைதாகினர். இவ்வாறு கைதாகியோர் பலர் தெருக்களில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலரது உடல்கள் ஆறுகளில் வீசப்பட்டன. பல சடலங்கள் தீயிடப்பட்டன. ஜே.வி.பி. தலைவரான றோஹண விஜேவீர உட்பட பலரை அரசு கைதுசெய்தது. விஜேவீரமீது தொடரப்பட்ட வழக்கில், அரசைச் சதிமூலம் கவிழ்க்க முயன்றது உட்பட பல குற்றங்களுக்காக அவருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1977ல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆரின் அரசு விஜேவீரவை விடுதலை செய்ததோடு பாராளுமன்ற அரசியலிலும் ஈடுபட அனுமதித்தது. இது ஜே.ஆரின் பெரிய ராஜதந்திரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஜே.வி.பி இயங்க அனுமதிக்கப் பட்டதன் மூலம் ஐ.தே.க.வுக்கு எதிரான வாக்குகள் சிதறடிக்கப் பட்டன.

பாராளுமன்ற அரசியலில் ஜே.வி.பி ஈடுபடத் தொடங்கிய போது அதன் தலைவர் விஜேவீர ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். எனினும் வெற்றியீட்ட முடியவில்லை. ஆனால் பல பாராளுமன்ற அரசியற் கட்சிகளைவிட ஜேவிபி கணிசமான ஆதரவை நாட்டின் சில பகுதிகளில் கொண்டிருப்பது தெளிவானது.

1983 யூலைக் கலவரத்தின்போது தானே திட்டமிட்டு எல்லாவற்றையும் நடத்தி முடித்த அரசு ஜேவிபிமீது பழியைச் சுமத்தி அதைத் தடை செய்தது. ஜேவிபியின் தலைமறைவு வாழ்க்கை மீண்டும் தொடர



இது ஒரு காரணமாயிற்று

இலங்கை இந்திய அரசுகள் தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்க ஒரு ஒப்பந்தத்தைத் திணித்தபோது, ஜேவிபி சிங்கள மக்களிடம் இந்தியா பற்றி இயல்பாக இருந்த அச்சத்தைப் பயன்படுத்தி தன்னை வளர்த்தது. இந்தியா வெளியேறவேண்டும் என்ற ஜேவிபியின் கோசத்துக்கு சிங்கள மத்திய வர்க்கமும் பெரும் ஆதரவு தெரிவித்தது. தொடர்ச்சியான அரச எதிர்ப்பு நடவடிக்கைகளால் அரசு வெகுவாகப் பாதிக்கப் பட்டது. இப்போராட்டங்கள் அனேகமாக ஜேவிபியின் மிரட்டலாலேயே மேற்கொள்ளப் பட்டன. ஆயுத முனையில் மக்கள் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எழுபதுகளில் தமிழ்ப்போராளிகள் தொடக்கிய ஆயுதப் போராட்டத்தில் இருந்த அத்தனை அம்சங்களையும் ஜேவிபி எதுவித விசாரணையும் இன்றி அப்படியே கைக்கொண்டது. 'சமூக விரோதிகள்' ஒழிப்பு (முக்கியமாக மின்கம்பத் தண்டனை), வங்கிக் கொள்ளை, பொலிஸ்காரர் மீது தாக்குதல், பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் என வளர்ந்த போக்கு கண்ணிவெடியையும் திறமையாகக் கையாளும் அளவுக்கு ஜேவிபியை வளர்த்தது.

1989 ஒகஸ்ற்றில், படையினரின் குடும்பங்களை அழிப்பதாக ஜேவிபி அறிவித்தமை, படையினரின் சிறுபகுதியில் இருந்த ஜேவிபி ஆதரவு அலையையும் வீழ்த்தியது. படையினரின் குடும்பங்கள் நிர்மூலமாக ஆக்கப்பட்ட அதே பாணியில் அரச படைகள் ஜேவிபி சந்தேக நபர்களின் குடும்பங்களையும் அழித்தனர். அரசின் நிழல் ராணுவங்களான பச்சைப்புலி, கரும்பூனை போன்றன இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டன, ஜேவிபி ஆதரவு நிலவிய இடங்களில் மிருகவெறியோடு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தன.

அனுராதபுரத்தில் படையினர் மீதான கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றின் பின்னர் 63 சிங்கள இளைஞர்களின் சடலங்கள் வீதியில் கிடந்தமையும் அதற்கு கரும்பூனை இயக்கம் உரிமை கோரியமையும் இவ்வகையானதே. ஜேவிபியினரின் 'படையினரின் குடும்பங்களை அழிக்கும் நடவடிக்கை' அவ்வமைப்பின் அழிவுக்குப் பெரும் காரணமாகியது. 1989 நவம்பர் இரண்டாம் வாரம் வேறு பெயரில் வாழ்ந்துவந்த றோஹண விஜேவீரவும் அவரது முக்கிய சகாவான எச்.பி.ஹேரத்தும் கைதாகினர். இது அரசின் பெரு வெற்றியாகக் கணிக்கப்பட்டது.




அரசபடைகளால் கைதாக்கிக் கொழும்பு கொண்டுவரப்பட்ட விஜேவீர, ஹேரத் ஆகியோர் தமக்கிடையே துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட முயன்றதாகவும் அதைத் தவிர்க்கப் படையினர் முயன்றபோது நிகழ்ந்த துப்பாக்கி மோதலில் இருவரும் கொல்லப் பட்டதாகவும் அரசு அறிவித்தது. எனினும் விஜேவீரவை நீதிமன்றத்தில் விசாரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியே அரசு அவர்களைக் கோழைத்தனமான முறையில் கொன்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

படைகளிடம் கைதானபின், அரசின் நடவடிக்கைகள் பற்றிய எதுவித விமர்சனமும் இன்றிய உரையொன்றை விஜேவீர நிகழ்த்தினார். ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறு அவ்வுரை ஜேவிபியினரைக் கோரியது. இவ்வுரை ஒளிப்பதிவு செய்யப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. அதுவரைகாலம் விஜேவீரவின் தலை(மை)யை நம்பியிருந்த ஏராளமான சிங்கள இளைஞர்களுக்கு முட்டாள் பட்டம் சூட்டப்பட்டது.

ஜேவிபியின் 1971கிளர்ச்சியின் பின்னர் ஏறத்தாழ 20,000 சிங்கள இளைஞர்கள் அரசால் கொல்லப் பட்டனர். 1989 – 90 காலப் பகுதியில் அரசாலும் ஜேவிபியாலும் ஏறத்தாழ 80,000 பேர்வரை கொல்லப் பட்டனர் என நம்பப்படுகிறது. இவர்களில் பலர் வீதிகளில் அரைகுறை உயிரோடு எரிக்கப்பட்டனர், கொல்லப் பட்டபின் ஆறுகளில் வீசப்பட்டனர். இந்த நடவடிக் கைகளே இப்போது கிழக்கில் தொடர்கின்றன.


71கிளர்ச்சியும் 1987 – 90வரையிலான ஜேவிபி நடவடிக்கைகளும் பலவித படிப்பனைகளைக் கொடுக்கவல்லன.

ஜேவிபிக்கு சில சமயங்களில் மக்கள் ஆதரவு இருந்தபோதும் அது நேரடியாக ஒருவித மக்கள் அமைப்பையும் கட்டியெழுப்பவில்லை. கிளர்ச்சியின் மீதும் ஆயுதத்தின் மீதும் அது கொண்டிருந்த நம்பிக்கையை அது மக்கள் மீது கொண்டிருக்கவில்லை.

பாராளுமன்றத்தை எப்படிப் பாவிப்பது என்பதையும், ஆயுதப் போராட்டத்தை மக்கள் போராட்டங்கள் எவ்வாறு வழிநடத்த முடியும் என்பதையும் ஒருபோதும் அது சரியாகக் கணிப்பிடவில்லை.

ஜனநாயக மரபில் நின்ற இடதுசாரிகளைத் தன்னிடம் இருந்து அன்னியப்படுத்தியதுடன், அவர்களையே முதல் எதிரிகளாகக் கணித்தது. இதனால் அரசு மேலும் பலமடைய முடிந்தது.

இவ்வாறான தவறுகள் ஜேவிபியை தோல்வி நோக்கியே வழிநடத்தின. இவற்றில் இருந்து மீள்வதற்குப் பதில் ஜேவிபி அவற்றிலேயே மூழ்கியது. தற்போது இவ்வமைப்பு முற்றாக இயங்கமுடியாமல் இருப்பதாகவும் சில பிரிவினர் மாத்திரம் தம்மை மீளக் கட்டியெழுப்பித் தொடர்ந்து போராட முயல்வதாகவும் அறியப்படுகிறது.




ஜேவிபி தமிழர்களைப் பொறுத்தவரை வரலாற்றுத் துரோகம் இழைத்த ஒரு குழு என்றே கூறமுடியும். தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தபோது அதை இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு உதவும் எனக் கூறி நிராகரித்தது ஜேவிபி. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் கொண்டிருக்கக்கூடிய சுயநிர்ணய உரிமையையும் அது ஏற்றுக் கொள்ளவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வையே அது வலியுறுத்தியது.

பாராளுமன்ற அரசியல் கட்சியான நவசமசமாஜக் கட்சி உட்படப் பல சிங்கள அமைப்புகள் ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அது நிராகரித்தது. தன்னை ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பாகக் காட்ட நினைத்த ஜேவிபி கொண்டிருந்த அரசியல் வறுமையையே இது காட்டுகிறது. எனினும் தமிழ் மக்களுக்கெதிரான வன்முறைகளில் ஜேவிபி பெரியளவில் இறங்கவில்லை.

ஜேவிபி இன்னும் ஒருதரம் மறுபிறப்பு எடுக்கலாம், அல்லது மறைந்தே போய்விடலாம். ஆயினும் ஜேவிபியோ அல்லது வேறு புரட்சிகர அமைப்புகளோ தோன்றுவதற்கான காரணங்கள் எதுவும் அழிந்துவிடவில்லை. தமிழ் மக்களின் போராட்டம் ஊட்டும் நம்பிக்கையும், ஒடுக்குமுறைகள் மேலும் கூர்மை அடைவதும் சமூக ஏற்றத் தாழ்வுகள் மேலும் வளர்வதும் சிங்கள மக்களை ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டத்துக்கு தவிர்க்க முடியாமல் இட்டுச் செல்லும். அவ்வாறான ஒரு போராட்டம் தெற்கில் தோன்றுகையில், ஒடுக்கப்படும் சகல சிறுபான்மை இனத்தவர்க்குமான விடுதலையும் உததரவாதம் பெறும்.

## விஜேவீர– 'குறுங்காலக் கதாநாயகன்'



யூலை 1943இல் டொன் அன்றீஸ் விஜேவீர தம்பதிகளுக்கு டொன் நந்தசிறி (றோஹண) விஜேவீர மூத்தமகனாகப் பிறந்தார்.

விஜேவீர இளமையில் வறுமையுடன் மிகவும் போராடினார். 1959இல் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சித்தியடைந்த அவரால் வறுமை காரணமாகப் படிப்பைத் தொடர முடியவில்லை.

இவரது தந்தையார் 1947 பொதுத் தேர்தலில் ஹக்மனைத் தொகுதி கொம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகத் தீவிர பிரச்சார வேலையில் ஈடுபட்டிருந்தபோது எதிரணியினரால் தாக்கப்பட்டு கால்கள் பாதிப்புற்று படுத்தபடுக்கையாகி 1965இல் மரணமானார். இவரது மரணமே விஜேவீர தீவிரமாக அரசியலில் ஈடுபடக் காரணமாயிற்று எனக் கூறப்படுகின்றது.

1960இல் விஜேவீர கொம்யூனிஸ்ட் கட்சியின் சிபாரிசால் மொஸ்கோவில் கல்விபயிலும் வாய்ப்பைப் பெற்றார். மருத்துவத் துறையில் மூன்று வருடங்கள் பயின்ற விஜேவீரவின் அரசியற் சிந்தனைகள் மாவோயிசத்தால் கவரப்பட்டன. இது இவரது மொஸ்கோ விசா ரத்துச் செய்யப்படக் காரணமாயிற்று. 1964இல் விஜேவீர படிப்பைக் கைவிட்டார். இலங்கையில் பீக்கிங் சார்புக் கொம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணிச் செயலாளராக செயற்பட்ட விஜேவீர, கட்சித் தலைவர் சண்முகதாசனுடன் முரண்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முரண்பாடு விஜேவீர கட்சியிலிருந்து வெளியேறி, மக்கள் விடுதலை முன்னணியை (ஜேவிபி) ஸ்தாபிக்கக் காரணமாயிற்று.

1971 கிளர்ச்சியின்பின் நடாத்தப்பட்ட வழக்கில், நீதிமன்றம் விஜேவீரவுக்கு ஆயுட்தண்டனை வழங்கியது. 1977இல் விடுதலை செய்யப்பட்டு, 1982இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்விகண்ட விஜேவீர, 1983இல் ஜேவிபி மீதான அரசின் தடைக்குப்பின் மீண்டும் தலைமறைவானார்.

விடுதலையாகி வாழ்ந்தபோது வசதிமிக்க குடும்பத்தில் திருமணம் புரிந்த இவருக்கு குழந்தைகளும் உள்ளனர். 1989இல் அரசபடைகள் நடாத்திய தேடுதலில் கம்பளையில் சொகுசான முதலாளியாக மாறுவேடத்தில் இருந்த விஜேவீர கைதானார். நவம்பர் மாதம் 12ஆந் திகதி கைதான விஜேவீர, 13ஆந் திகதியே படையினரால் கொல்லப்பட்டார். அவரது உடல் பாதுகாப்புக் காரணங்களால் தகனம் செய்யப்பட்டதாக அரசு அறிவித்தது.

- நக்கீரன் -

## யார் கூறுவர்!

யார் கூறுவர்
அடிமைகள்
நாமென்று....

தொலைந்த
முகம்
எண்ணி
முண்டம் சுமந்துவர

தொலைவில்
இரைச்சலாய்
எங்கள்
'குருதி' கலந்த
அந்தப் பொதிகள்

நாளை
ஏற்றுமதிக்காய்....

நாம்
மட்டும் மிகுதி
தேயிலைக்காய்
காத்திருப்பு!....

அனிச்சங்களுடன்
சாம்பலானது
நாமும்தான்
காலவரையின்றி!

சுதந்திரத்தை
நாம்
தொலைத்ததென்றில்லை
தொலைப்பதற்கு
அப்படியொன்றும் நம்மிடட
இருக்கவுமில்லை!...

இதுவரை
நமக்காக
நம்மையும்
என்று
எதுவுமில்லை

ஆங்காங்கே
சில
பரிதாப கவிதைகள்
நமக்காக
என்று கேள்வி,

அது
போதுமென்றுதானோ
என்னவோ

யாரும்
அலட்டிக் கொள்ளவில்லை
அடிமைகள்
நாமென்று.

கலிஸ்டா
20.06.91



# கிழக்கில் அரசின் கோரக் கரங்கள்



- அரவிந்தன் -

இலக்கத் தகடுகளற்ற வாகனங்களில் சிவிலுடையில் வரும் அரசின் கொலைப்படைகள் தன்னிச்சையாக அப்பாவிப் பொதுமக்களைக் கைதுசெய்வதும், சித்திரவதைக்குப்பின் அவர்களது சடலங்களை வீதியோரங்களிலும், கடற்கரைகளிலும் வீசுவதும், அவலங்களையே தொடர்ந்து சந்தித்த கிழக்கு மக்கள்மீது அரசு நடாத்தும் மிகவும் மோசமான அடக்குமுறையின் துயர்நிறைந்த காட்சியாக உள்ளது.

சிங்கள இளைஞர்களைக் கொன்று குவிப்பதில் தேர்ச்சிபெற்ற அதிகாரிகளும், படையினருமே கிழக்கின் சம்பவங்களுக்குப் பொறுப்பாக இயங்கி வருகின்றனர்.

1989 - 90 காலப்பகுதியில் தென்னிலங்கையில் நடத்திய அதேமுறையிலான மனிதவேட்டையை அரசு கிழக்கிலங்கையில் தற்போது அமுல்படுத்தி வருகின்றது.

தென்னிலங்கையில் நடாத்தப்பட்டதுபோல பலர் திடீரெனக் கைதாவதும், மறுதினம் சடலமாவதும் கிழக்கில்- முக்கியமாக மட்டக்களப்பில் - தினசரி நிகழ்வுகளாகி வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் மாலைவேளைகளிலேயே அதிகமாக நிகழ்ந்து வந்ததையடுத்து மக்களை இரண்டு மணிக்குமேல் வெளியில் செல்வதைத் தவிர்க்குமாறு செஞ்சிலுவைச் சங்கம் கேட்டிருந்தது. எனினும் தற்போதைய நிகழ்ச்சிகள் இரண்டு மணிக்கு முன்னரே நடப்பதால் பத்து மணியளவிலேயே பலர் தமது வீடுகளுக்குள் முடங்கிக் கொள்கின்றனர். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றனவோ, தொழில், வர்த்தக நிறுவனங்களோ இயங்கமுடியாத ஸ்தம்பித நிலையே உருவாகியுள்ளது.

இலங்கையரசால் நடாத்தப்படும் இந்தக் கொடிய மனிதவதைகளால் தமிழ் மக்களது உணர்வை ஒடுக்கிவிட முடியாது. பதிலாக அரசின் உண்மையான முகத்திரை கிழிக்கப்படுவதோடு, விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வே மக்களிடம் மேலெழுந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ੴ ਸਤਿਗੁਰ ਪ੍ਰਸਾਦਿ । GOD IS ONE

# SINGH EKSPRESS

Reisebyrå

Visiting Add.: Fred. Olsensgt. 6 (Paléhuset) N-0152 Oslo 1
Mailing Add.: Postboks 109 Sentrum, N-0102 Oslo 1
Tlf. (02) 42 58 01/2 - Telefax (02) 42 56 76
Bank Fokus Bank, Acc. 8101.05.06913

* Malasian Airlines - Kualaaumpur, Singapore

* Aeroflot - Colombo, Singapore

* Air India - Madras, Singapore

* Air Lanka - Colombo, Singapore, Bangkok etc

* Good Prices To Europe *

* Always Good Prices *

Pal singh
formerly co-owner Singh Travels, Oslo.

மேலதிக விபரங்களுக்கு:-
CEYLON MAT A/S
SKIPPER GATA 30,
0154 OSLO 1
TLF: (02)332619

* உங்களுக்கு ஓர் நற்செய்தி!!!
* 24மணி நேரத்துக்குள் இலங்கைக்கு உங்கள் கடிதம் போய்ச்சேரும் என்று உங்களால் நம்பமுடியுமா?
* ஆமாம் முடியும். CEYLON MAT A/Sஇன் புதிய FAX சேவை உங்களுக்காக செயற்பட ஆரம்பித்துள்ளது.
* கடிதங்கள், விபரங்கள் எதுவாயினும் எந்தமொழியிலும் இலங்கையில் உரியஇடத்தில் சேர்ப்பிக்கப்படும்.
* ஒருமுறை முயற்சித்துப் பாருங்களேன்!

மேலதிக விபரங்களுக்கு:—

SKIPPER GATA 30,
0154 OSLO 1
TLF: (02) 332619

CEYLON MAT A.S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் கண்களை மறைக்கும் தமிழர்கள்!

இலங்கை மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பாக ஆராய சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த இரு குழுவினர் ஒகஸ்ட், செப்டம்பர் ஒக்டோபர் மாதங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

கடந்த வருடம் ஜெனிவாவில் நிகழ்ந்த மனித உரிமைக்குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்படாது போனது குறிப்பிடத்தக்கது. மாறிமாறித் தமிழ்க் குழுக்கள் அரசிடம் சோரம் போனது வெளியுலகின் கண்களுக்கு, தமிழர்களுக்கு எதிரான அரசின் மனிதவுரிமை மீறல்களை மறைக்கவே சாதகமாக உள்ளது.

தற்போது தமிழர்களுக்கு எதிராக கொடூரமான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசுக்குப் பல தமிழ்க் குழுக்கள் ஆதரவளிப்பது, இந்த தாக்குதல்களை வெறுமனே 'புலிகளுக்கு எதிரான' நடவடிக்கை மட்டுமே என புலுடா விடும் அரசுக்குச் சாதகமாகவே இருக்கிறது. இதனால் வடக்கிலும் கிழக்கிலும் அரசு நடத்தும் இனஅழிப்பை வெளியுலகம் மௌனமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடந்த யூன் மாதத்துக்கு முன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே 'தேன் நிலவுக் காலமாக இருந்ததால் ஜெனிவாவில், அரசின் சிங்கள மக்கள் மீதான ஒடுக்குமுறை வெளிவரவில்லை. புலிகள் அரசு சார்பையே எடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறதோ இல்லையோ எதிர்வரும் மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் பல தமிழ்க் குழுக்கள் அரசு சார்பான போக்கைக் கடைப்பிடிக்கலாம்என அனுமானிக்கப் படுகிறது. இதனால் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் கொடுமைகள் மறைக்கப்பட்டு, அதற்காக சில எலும்புத் துண்டுச் சலுகைகளையும், சுகபோகங்களையும் பின்கதவால் அள்ளி வீசுவது நிச்சயம். இதைத்தடுத்து அரசின் உண்மையான சொரூபத்தையும், மாறிமாறி அரசுக்கு சோரம் போகும் குழுக்களையும், மக்களின் நலன்களை மதியாது தமது நலன்களுக்காக தமிழ் மக்களைப் பகடைக்காய்களாக மாற்றும் குழுக்களையும் அம்பலப்படுத்தி தூக்கி எறியவேண்டும். தமிழ் மக்கள் கடந்த கால வரலாற்றில் இருந்து இனியாவது கற்றுக்கொள்வது அவசியம்.

தேவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழத்தில் இருந்து வந்த கடிதம்

## "தொடரும் புலிகளின் கைது நடவடிக்கைகள்"

தீப்பொறி அமைப்பைச் சேர்ந்த கேசவன் உட்பட மொத்தம் 10பேர் அண்மையில் விடுதலைப்
புலிகளால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர். மே17 நள்ளிரவு கேசவன் தங்கியிருந்த வீட்டைச்
சுற்றிவளைத்த புலிகள் சீருடைகளிலும் ஆயுதபாணிகளாகவும் இருந்தனர். கேசவன் கைதைத்
தொடர்ந்து 21ஆந் திகதி நள்ளிரவு மீரா உட்பட 4பெண்களையும், யாழ்ப் பல்கலைக்கழக
மாணவன் சிறீனிவாசன் (கலைப்பீடம் 2ஆம் வருடம்), கோவிந்தராஜன் (கலைப்பீடம் 3ஆம்
வருடம்) உட்பட 4மாணவர்களையும் கோவிந்தன் என்பவரையும் 'கைது' செய்துள்ளனர்.
ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்கவரான கேசவன் (மறுபெயர்கள்: நோபேட்/
கோவிந்தன்/ டொமினிக்) மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 70களில் கலை,
இலக்கிய பத்திரிகைத் துறைகளில் உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை 'தீர்த்தக்கரை'
எனும் பத்திரிகையில் எழுதியவர். 80களில் புளொட் அமைப்பில் இணைந்துகொண்ட
போதும், புளொட்டின் உட்கட்சி அராஜகம், படுகொலைகளால் வெளியேறி 'தீப்பொறி'
அமைப்பை ஸ்தாபித்தார். புகழ்பெற்ற 'புதியதோர் உலகம்' நாவலையும் இப்பகுதிகளிலேயே
எழுதினார்.

கேசவனைக் கைதுசெய்யும்போது "எங்களுக்கு எதிராக வேலைசெய்யக்கூடிய எவரையும் நாம்
விட்டுவைக்க மாட்டோம். தீப்பொறியை முக்கியமான சக்திகளுள் ஒன்றாகக் கருதுகிறோம்.
எனவே உங்களைக் கைதுசெய்கிறோம்" எனப் புலிகள் கூறியுள்ளனர்.
பல்கலைக்கழக மாணவர்களைக் கைதுசெய்த பின்னர் பல்கலைக்கழகத்தில் புலிகள்
கூட்டமொன்றைக் கூட்டினர். அங்கு பேசிய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான'
மாணவர்கள்மீது பொய்க் குற்றச்சாட்டுகள் பலதைக் கூறியுள்ளார். பின்னர் கூட்டமுடிவில்
"கைதானவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்" என மாணவர்களைக்
கேட்டனர். நீண்டநேர மௌனத்தின் பின் துணிச்சலான மாணவர் ஒருவர் "இவர்களை
மன்னித்துவிட முடியாதா?" எனக் கேட்டார். எதுவித பதிலுமில்லாமலேயே கூட்டம்
முடிக்கப்பட்டது.

யூனில் யுத்தம் ஆரம்பமானதில் இருந்து புலிகளால் பின்வருவோர் கடத்தப் பட்டுள்ளனர்:
செல்வகுமாரன் (NLFT), அன்ரன் (விவேகானந்தன்), தருமலிங்கம், மற்றும் 50இற்கும்
மேற்பட்டோர் உட்பட மொத்தம் 200பேர்வரை 'காணாமற்' போயுள்ளனர்.
யாழ்ப் பல்கலைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொலையில் இருந்து இன்றைய
கைதுகள்வரை பிடிபட்ட/ கொல்லப்பட்ட எவருமே இந்திய/ இலங்கை அரசுகளுக்கு
சார்பானவர்கள் அல்லவென்பதும், எவ்வகையிலுமே 'துரோகிகள்' எனப் பட்டம் சூட்டப்பட
முடியாதவர்கள் என்பதும் மறைக்கப்பட முடியாதது.

இக்கொலைகளும் கைதுகளும் மக்களது ஜனநாயக உரிமைகளைப் புதைப்பதுடன்
போராட்டத்தையும் பின்தள்ளுகின்றன. இக் கைதுகளையும் கொலைகளையும் வன்மையாகக்
கண்டிப்பதோடு, இவற்றைத் தடுக்க இயன்ற அனைத்தையும் செய்யுமாறு கோருகின்றோம்.

- நண்பர்கள் -

(ஈழம்)

# இரு பதில்கள்

## கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த தமிழர்களும் ஒரு கலை விழாவும்

### பதில் 1:

ஆசிரியர்,
சுவடுகள்,
07/06-91.

அன்பின் சுவடுகளுக்கு,

கடந்த சுவடுகளில் யோகி எழுதியிருந்த "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்ததமிழர்களும் ஒரு கலைவிழாவும்" என்ற விமர்சனக் கண்ணோட்டம் வாசித்தேன்.

நண்பரின் கண்ணோட்டம் எளிமையாகவும் எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. தன்னையும் குழப்பி, சுவடுகள் வாசகர்களையும் ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்திவிட்டார். தமிழ்ச்சங்க புதுவருட விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றான விவாதஅரங்கினை சீர்தூக்கி மதிப்பீடு செய்யவில்லை என்றே கூறவேண்டும்.

விவாத அரங்கினைப்பற்றி நான் ஒருசில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். காரணம், நானும் அவ்விவாத அரங்கில் கலந்துகொண்டவன். விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விவாதத் தலைப்பு, விவாதமேடைக்கு ஒவ்வாத ஒன்றாகும். அத்தலைப்பு வழக்காடு மன்றங்களுக்கே (Symposium) பொருத்தமானதாகும். முரண்பாடுள்ள அல்லது வாதம் செய்வதற்கேற்ற விடயங்களுள்ள நல்லதொரு தலைப்பினை முன்வைக்க தமிழ்ச்சங்கக் கலை, கலாசாரப்பிரிவு தவறிவிட்டதென்றே கூறவேண்டும்.

அன்று நடைபெற்ற விவாத அரங்கில் இருஅணியினரும் வெளியிட்ட கருத்துகள் ஏனோதானோ என்றரீதியில் கூறப்பட்டவையாக விமர்சகர் கருதுகிறார். விவாத அரங்கில் மைத்திரேயி, தயாநிதி போன்றோர் தெரிவித்த நல்ல ஆழமான கருத்துகளை நண்பர் செவிமடுக்க மறந்துவிட்டார்போல்த் தெரிகிறது. எது எப்படியிருப்பினும் புனைதலும் பூச்சூடலுந்தான் நண்பரின் விமர்சனக் கண்ணோட்டத்தில் மிதமாகத் தெரிகிறது.

நண்பர் பொன்.கோணேஷ், துரைராஜ், சிவகுமாரன், குகன் போன்றோரிடம் நகைச்சுவையும், தாங்களே உணர்ச்சிவசப்பட்டு உரக்கப்பேசி சபையோரிடம் கைதட்டு வாங்கிவிட வேண்டுமென்ற உத்வேகமும், மொழியாற்றலை வைத்து சொற்சிலம்பம் ஆடலுமே கூடுதலாகக் காணப்பட்டதென நண்பர் குறைப்பட்டிருக்கிறார். எப்போதும் வழக்கமாக விவாத அரங்குகளில் நகைச்சுவையென்பது பின்னிப் பிணைந்து நிற்பது. இது நண்பருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை என நினைக்கிறேன். 'தூங்கியெழும் சபையோரைத் தட்டியெழுப்பும் மந்திரக்கோல்தான் நகைச்சுவை' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நண்பர் குகன் அவர்கள், நோர்வேஜிய சமுதாயத்தின் மனிதநேயமிக்க நல்ல பண்புகளையும், மேலைத்தேய கலாசாரத்தைப் பற்றியும் அறியாதவரல்ல. அவரை இவ்வளவுதுாரம் இடித்துரைத்திருக்கத் தேவையில்லை.

மைத்திரேயி, தமிழ்ச்சினிமாவைப் பார்த்து தமிழ்க் கலாசாரத்தை வளர்த்துக் கொள்ளலாமென்று கூறியதற்கு பிழையான விளக்கத்தைக் கொண்டிருக்கிறார் விமர்சகர். நல்ல தரமான தமிழ்ப்படங்களைக் குழந்தைகள் பார்ப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்றே மைத்திரேயி கூறியிருந்தார். அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் தமது குழந்தைகளுக்கு, தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் படங்களைப் பார்ப்பதற்கு ஆவன செய்கிறார்கள் என்றும், பூஜை வழிபாட்டுக்குரிய மந்திரங்களையும் திருமுறைகளையும் ஒலிப்பதிவுநாடாவில் ஒலிப்பதிவு செய்து பழக்குவதையும், 'உலாவர ஓர் உலகம்' எனும் தனது பயணக் கட்டுரை நூலில் எழுத்தாளர் வாஸந்தி குறிப்பிட்டிருப்பதனை இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே நாம், அதாவது பெற்றோர்கள் நினைத்தால் எமது கலாசாரத்தில் குழந்தைகளை வளர்க்கவும் முடியும். அதேபோன்று நோர்வேஜிய சமுதாயத்திலுள்ள நல்ல பண்புகளையும் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்க முடியும்.

விவாத அரங்குக்கு தலைமை தாங்கிய சிவதாஸ் அவர்கள், விவாத அரங்கில் கலந்துகொண்டவர்கள் எல்லாம் நுனிப்புல் மேய்ந்தார்கள் என்று கூறியதோடல்லாது, சரியான தீர்ப்பொன்றை வழங்கத் தவறிவிட்டார். அடுத்ததாக, இருபக்கச் சாரார்தும் கருத்துகளை தொகுப்பாகத்தர மறந்துவிட்டார்.

சபையோர் குறிப்புரையில், நண்பரொருவர் விவாத அரங்குக்குச் சம்பந்தமில்லாமல், மேடையில் ஏறி ஏதாவது பேசவேண்டும் என்ற எண்ணத்தில் பேசியதனையும் விமர்சகர் பெரிதுபடுத்தி விமர்சித்திருந்தார். அதுகுறித்து நான் இங்கு ஒன்றும் குறிப்பிட விரும்பவில்லை.

நண்பரின் விவாத அரங்கு விமர்சனத்திற்கு எழுதிய கடிதமே இவ்வளவுதூரம் நீண்டுவிட்டது, மற்றைய நிகழச்சிகளைப் பற்றிய விமர்சனத்தை விபரிக்கத் தொடங்கினால் கடிதம் பாரதமாகிவிடும். ஆகவே இம்மடலை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

என்றும்
இவண் அன்புடன்
பாலசந்திரன் சிவகுமாரன்.
ஒஸ்லோ 1

---

### பதில் 2:

---

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய மூத்த தமிழர்களும் ஒரு
கலைவிழாவும் என்ற தலைப்பின்கீழ்
யோகியினால் எழுதப்பட்ட, கடந்த
சுவடுகளில் வெளிவந்த கட்டுரை
சம்பந்தமான எனது கருத்துகளை
வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள
விரும்புகின்றேன்.
கடந்த ஏப்ரல் மாதம் நோர்வே
தமிழ்ச்சங்கத்தால் நடாத்தப்பட்ட
புத்தாண்டு தினத்தையொட்டிய
விழாவிலே நடைபெற்ற பட்டிமன்றம்,
நடன நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி
என்பவற்றைப் பற்றிய தனது
விமர்சனத்தையே யோகி முன்வைத்தார்.
ஆனால் நான் இவற்றுக்கு மாறாக
அன்று நடைபெற்ற அனைத்து
நிகழ்சிகளைப் பற்றியதுமான-
முழுமையாக இல்லாவிடினும்- எனது
விமர்சனத்தை முன்வைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகளில் வெளியாகும் படைப்புகளில் உள்ள கருத்துகள் படைப்பாளிகளின் கருத்துகளே. இவை சுவடுகளின் கருத்தாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

-- சுவடுகள்

விரும்புகிறேன்.

முதலாவதாக இரண்டு சிறுவர்கள் நடாத்திய இசை நிகழ்ச்சிக்கு வருகின்றேன். அந்த இருசிறுவர்களும் வளர்ந்து வருகின்ற கலைஞர்கள். அவர்களது முயற்சி மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்று. தம்மால் இயன்றவரை, தமது திறனுக்கு எட்டியவரை அவர்கள் அந்த நிகழ்ச்சியை மகிழ்வுடன் அளித்தமை பாராட்டப்பட வேண்டியதொன்று. இப்படி முன்வந்து கலைநிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் இளைய சமுதாயத்தினரை நாம் மேன்மேலும் ஊக்குவிக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் மேலும் மேலும் வளர வாய்ப்பு அளிக்கப்படும்- அது எமது சமூகத்தின் வளர்ச்சிக்கும் உதவும். இதேபோலத்தான் ஒரு சிறுமி அளித்த நடன நிகழ்ச்சியையும் குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சிறுமி முறையாக நடனம் பயிலாவிடினும் தாளலயத்துக்கு ஒத்துழைத்து, தன்னாலியன்ற பாவனையைக் காட்டியது அந்தச் சிறுமி அந்த நடனக்கலையில் தன்னை வளர்த்துக் கொள்வதற்கான ஆரம்பமாகவே நான் கருதுகின்றேன். இப்படிச் சிறுவர்கள் கலையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை பெற்றோர் ஊக்கிவிக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். எமது பாரம்பரியக் கலைகளை இந்தச் சூழலிலே வாழும் சிறார்கள் இப்படிப்பட்ட கலைநிகழ்ச்சிகளூடு முழுமையாக தெரிந்து கொள்ளாவிடினும் ஓரளவேனும் தெரிந்துகொள்ள வாய்ப்புகள் உண்டாகும்.

அடுத்ததாக அன்று இடம்பெற்ற பட்டிமன்றம் தொடர்பாக வருகின்றேன். முதலாவதாக அந்தப் பட்டிமன்றம் அப்படிப்பட்ட ஒரு தலைப்பில் நடத்தியிருக்கப் படக்கூடாது. "எமது பிள்ளைகள் எமது கலாசாரத்திலா இந்தக் கலாசாரத்திலா வளர்க்கப்பட வேண்டும்" என்ற தலைப்பு, ஏதோ "ஆடு- மாடுகளை பண்ணையிலே தவிடு, புண்ணாக்கு, புல்லு என்பன போட்டு வளர்ப்பதா அல்லது வெட்டவெளியில் தமது இஷ்டப்படி மேயவிட்டு வளர்ப்பதா" என்பது போல உள்ளது. எமது பிள்ளைகள் இந்தக் கலாசாரத்தில் வளர்வதா இல்லை எமது கலாசாரத்தில் வளர்வதா நல்லது என்று தலைப்பு அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்தப் பட்டிமன்றம் தொடர்பாக யோகி வைத்த விமர்சனத்தை பெரும்பாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இதில் குறிப்பாக ஒரு விடயத்தை குறிப்பிடலாம்- என்னவென்றால், எமது குழந்தைகள் இந்த நாட்டுக் கலாசாரத்தில் வளர்க்கப்படலாம் என்பது சார்பாக வாதிட்ட அணியைச் சேர்ந்த ஒரு பெண், தனது அபிப்பிராயத்தை பேப்பரில் எழுதி மேடையிலே அவ்வளவு சபையோர் முன்னிலையில் வாசித்தார். பட்டிமன்றத்திலே பார்த்து வாசித்து வாதிடுதலை நான் பார்த்ததில்லை. அதைப் பார்த்தால் யாரோ எழுதிக் கொடுத்ததை இவர் எடுத்துவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்ததுபோல இருந்தது. இப்படிப்பட்ட தவறுகள் திருத்தப்படலாம்.

அடுத்ததாக நடன நிகழ்ச்சிக்கு வருகின்றேன். இந்த நடன நிகழ்ச்சியை எத்தனையோ பிரச்சனைகளுக்கு மத்தியில் மேடையேற்றிய அந்தப் பெண்களைப் பாராட்டாமல் இருக்கவே முடியாது. இதிலும் ஒரு விடயம் என்னவென்றால் அந்த நடன அமைப்பு யாரோ போட்டு இவர்கள் ஆடவில்லை பதிலாக அனுரேகா நடனஅமைப்பை உருவாக்க அதற்கு மைதிலி, உருத்திரா, வாணி போன்றோர் ஒத்துழைத்தார்கள். ஆக மொத்தம் கருதான் யாரோ உருவாக்கியது- ஆனால் நடன அமைப்பை உருவாக்கியவர்கள் இங்கு என்பது எனது அபிப்பிராயம்' என்று யோகி குறிப்பிட்டமையை- வைத்த விமர்சனத்தை- என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. யோகி பரந்த பார்வையில் விமர்சனத்தை வைக்கிறார் என்று நினைத்தேன் ஆனால் அவர் இந்த விடயத்தில் தவறை விட்டுவிட்டார் என்று கருகிறேன். பாடிய பெண்குரல் அன்று பாடலுடன் ஒத்துழைத்திருக்கலாம் அல்லது ஒத்துழைக்காது விட்டிருக்கலாம் அது வேறு. ஆனால் சபையிலே வழமையாக தேவையில்லாமலேயே கூச்சல்போடுவது இயல்பான ஒன்றாகிவிட்ட சூழலில், ஆரோக்கியமான விமர்சனங்களை வைக்கும் விமர்சகர்கள் இப்படி சபையில் போடும் கூச்சலுக்கு தாம் ஆதரவில்லை என்று கூறிக்கொண்டு ஆதரவாக பேசுவது, கலை நிகழ்ச்சிகளிலே பங்குகொள்ளும் கலைஞர்களது மனங்களைப் புண்படுத்துவதோடு அவர்கள் பின்னைய காலங்களில் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள முடியாத பின்னணிச் சூழலையும் உருவாக்கிவிடும். இங்கே சில கலைஞர்கள்தான் தம்மாலான பங்களிப்புகளைச்

சுவடுகளில் இடம்பெறும் படைப்புகள் பற்றிய விமர்சனங்கள் வாசகர்களிடம் இருந்து எப்போதும் வரவேற்கப் படுகின்றன. சுவடுகளுக்கு கடிதம் எழுதும் வாசகர்கள் தமது முகவரியை தாம் எழுதும் கடிதத்திலேயே குறிப்பிடுவது நலம். அவ்வாறு சுயமுகவரி அற்ற கடிதங்கள் மொட்டைக் கடிதங்களாகவே கருதப்பட முடியும். வாசகர்கள் தாம் விரும்பினால் புனைபெயரில் எழுதலாம் எனினும் எழுதுபவரின் பெயர், முகவரி போன்ற விபரங்கள் பத்திரிகைக்குத் தெரிந்திருத்தல் அவசியம். இது காலம்காலமாக எல்லாப் பத்திரிகைகளும் பின்பற்றும் நடைமுறை. சுவடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. சுவடுகளில் மொட்டைக் கடிதங்கள் பிரசுரமாக மாட்டா என்பதை முன்னரே தெளிவு படுத்தியிருக்கிறோம். அவ்வாறிருக்க சிலர் தாம் எழுதுவதைப் பிரசுரிக்காமல் விடுவதால், சுவடுகள் தமது எழுத்துச் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவதாக அர்த்தம் கற்பிப்பது கவலை தருகிறது. நாகரீகமாகவும், (பத்திரிகைக்கு எழுதப்படும்) முறையிலும் எழுதப்படும் எந்தக் கடிதமும், பிரசுரிக்கப்பட எம்மாலியன்றளவு உத்தரவாதம் வழங்குகிறோம்.

சுவடுகள்

செய்கின்றார்கள். இவர்களையும் மனம்நோகச் செய்து கலைப்பங்களிப்பில் வாழும் எமது பெண்கள். இது பெருமைக்குரிய ஒருவிடயம். அந்த நடனத்திலே எடுத்துக் கொள்ளப்பட்ட கருவில் எனக்குப் பெரிதாக உடன்பாடில்லை, ஆனால் அதை அவர்கள் நடனஅமைப்பு, பாவனைமூலம் வெளிக்கொணர்ந்த விதம் மிகவும்

அழகாக இருந்தது- இது எனது அபிப்பிராயம். யேசுவாக நடித்த குணசீலன் தனது பாத்திரத்தை நன்கே செய்தார். இவருக்கு போடப்பட்ட உடைகள் பெரிதாக பாத்திரத்துடன் ஒட்டவில்லை என்ற குறையைத் தவிர வேறுகுறை கூறமுடியாது.

இனி இசை நிகழ்ச்சிக்கு வருகின்றேன். இந்த இசை நிகழ்ச்சி மிகவும் நன்றாகவும் எளிமையாகவும் நடைபெற்றது என்று யோகி குறிப்பிட்டிருந்தார். இவர் இசை நிகழ்ச்சி தொடர்பாக வைத்த விமர்சனத்தில் எனக்கு ஒரு விடயத்தில் உடன்பாடில்லை. அதாவது, 'தவராஜா நீ தனியப்பாடு என்று சபையோர் மத்தியில் இருந்து ஒருவர் குரலெழுப்பியமை அதீதமெனினும், தவராஜா தனியப் பாடியிருக்கலாம்

இருந்து விலத்தியிருக்கச் செய்வது இங்கு வாழும் எமது சமூகத்துக்கு ஆரோக்கியமான தொன்றல்ல என்பதை யோகி உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகமொத்தம் தமது பொன்னான நேரங்களைச் செலவழித்து கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்டு பார்வையாளர்களைச் சந்தோஷப் படுத்துவதோடு தமது ஆத்மதிருப்தியையும் தேடும் கலைஞர்களை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

- யோகன் (ஒஸ்லோ)



## நடிகர் மீது தாக்குதல்

நோர்வே தொலைக்காட்சியில் வெளிநாட்டவர்கள் பற்றிய தொடர் நாடகமான 'Federeland' (தந்தைநாடு) பலரையும் கவர்ந்த விடயம். இது நோர்வே நாட்டுக்கு 70களில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க நாட்டவர்கள் வந்தபோது, அவர்களுக்கும் நோர்வேஜியர்களுக்கும் இடையிலான உறவுநிலையைப் பற்றிய நாடகத் தொடராகும். இதில் முக்கிய வேடமேற்று நடித்த பாகிஸ்தான் நாட்டவராகிய நஸீம் அஸான் அண்மையில் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்துள்ளார். இவரோடு இன்னும் மூன்று வெளிநாட்டவர்களும் இதேசமயத்தில் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இரவு விடுதி ஒன்றினுள் செல்ல இவர்கள் வாயிற் காவலரிடம் அனுமதி கேட்டதாகவும் அதற்கு அவ்வாயிற் காவலர் மறுக்கவே ஏற்பட்ட வாக்குவாதத்தில் வாயில் காவலர் இவர்களைத் தாக்கியதாகவும் அறியவருகிறது.

இவர் ஏற்கெனவே மேடையேற்றப்பட்ட 'பக்கீஸ்' நாடகத்திலும் முக்கிய வேடமேற்று நடித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ரகுநந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உடன்பட்டார்கள், தொடர்ந்தும் உடன்படாமல் இருப்பதற்காக..

கடந்த ஆண்டுக்கான 'நோபல்' சமாதானப் பரிசைப் பெற்ற சோவியத் அதிபர், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனது நோபல் சமாதான உரையை நிகழ்த்துவதற்காக அண்மையில் தனது பாரியார் சகிதம் நோர்வேக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். நோபல் பரிசுக் குழுவின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்திருந்த போதும், இவரின் விஜயந் தொடர்பான நிகழ்ச்சி நிரலில் முக்கிய அரசியல் நிகழ்சிகளும் இடம்பெற்றிருந்தன.

சோவியத் அதிபர் மிகயில் கொர்பச்சேவின் நோர்வே விஜயம் வழமைக்கு மாறாக பெரும் ஆர்ப்பாட்டங்களுடன் இடம்பெற்றது. சுமார் 24மணிநேரமே நோர்வேயில் தங்கியிருந்த கொர்பச்சேவுக்கு பாதுகாப்புக்கென 300 பாதுகாப்புப் படையினர் மூன்று விமானங்களில் அவருடனேயே வந்திருந்தனர். இதைத்தவிர ஒஸ்லோவில். பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் கடுமையாகப் பின்பற்றப்பட்டு, குறிப்பிட்ட சிலவீதிகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டு 24மணிநேரமும் ஹெலிகொப்ரரின் ரோந்துசேவை நடைபெற்றது. மறுபுறம் எதிர்ப்பு ஊர்வலங்களும் இடம்பெற்றன.

சோவியத் அதிபரின் விஜயத்தை இங்குள்ள பத்திரிகைகள் யாவும் வெவ்வேறு கோணங்களில் இருந்து விமர்சனம் செய்திருந்தன. சோவியத்தில் ஏற்பட்ட அதிகார மாற்றத்தைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சடுதியாக மாற்றத்தை அடைந்து பொதுத் தேர்தல்களில் ஈடுபட்டபோதும், சோவியத் யூனியனில். ஏற்பட்டுவரும் மந்தமான சீர்திருத்தங்களும், ஜனாதிபதி பதவியை பலாத்காரமாகக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் கொர்பச்சேவின் செயற்பாடுகளும், சோவியத்தின் பல்லின மக்களிடையே நிலவும் முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் அரசுகாட்டும் மெத்தனப் போக்கும், போல்டிக் குடியரசுகள் விடயத்தில் கொர்பச்சேவின் இராணுவ நிலைப்பாடும் அவர் தொடர்பாக ஒரு நம்பிக்கையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

போல்டிக் குடியரசுகள் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக நோர்வேயில் கொர்பச்சேவின் நிகழ்ச்சிகளை, நாட்டின் முக்கிய வலதுசாரிக்கட்சி பகிஷ்கரித்த சம்பவம் நீண்ட வருடங்களுக்குப் பிறகு இடம்பெற்ற ஒரு முக்கிய சம்பவமாகும். எனினும் கட்சியின் தலைவி காஸி குல்மான் ஃபீவ குறிக்கப்பட்ட ஒருசில

நிகழ்ச்சிகளில் மட்டும் வெறும் பார்வையாளர் என்ற ஸ்தானத்தில் கலந்துகொண்டார்.

இவ்விஜயத்தின்போது பிரதமர் குறுாஹாலம் புறுாண்ட்லாந் உடனும் வெளிநாட்டமைச்சர் ஸ்ரொல்ற்றன் போக் உடனும் சோவியத் அதிபர் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் எதுவித பலனையும் தரவில்லை என்றே கூறப்படுகின்றது. குறிப்பாக நாட்டின் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளின் கடற்பிராந்திய எல்லைகள் தொடர்பான பிரச்சனை, சோவியத் - நோர்வே எல்லையில் நிறுவப்பட்டிருக்கும் சோவியத்தின் அணுவாயுதத் தொழிற்சாலை, பால்டிக் குடியரசுகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இருபக்க வர்த்தக உடன்பாடு, சுங்கவரி நீக்கம் தொடர்பான பொது உடன்பாடு இப்படி எதுவுமே பேச்சுகளின்போது இணக்கங் காணப்படவில்லை. எனினும் பேச்சுவார்த்தை புரிந்துணர்வுடனும் சுமூகமாகவும் இடம்பெற்றதாக பிரதமரின் காரியாலயம் அறிவித்துள்ளது.

கொர்பச்சேவுக்கு வழங்கப்பட்ட சமாதானத்துக்கான நோபல்பரிசு அவரின் தனிப்பட்ட செல்வாக்குக்கு உறுதுணையாக இருக்கலாம். ஆனால் மாற்றத்தை வேண்டிநிற்கும் சோவியத் மக்களுக்கு...?

- சஞ்சயன் -

*கொர்பச்சேவின் விஜயத்தின்போது இங்குள்ள ஆப்கானிஸ்தான் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஊர்வலத்தில் முன்னறிவிப்பு இன்றி பிளிட்ஸ் (Blitz) அமைப்பினரும் கலந்துகொண்டனர். இதையடுத்து பொலீசாருக்கும் பிளிட்ஸ் அமைப்பினர்க்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் 50பிளிட்ஸ் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டும் பலர் பொலீசாரின் குண்டாந்தடிப் பிரயோகத்துக்கும் ஆளாக்கப்பட்டனர்.*

## ஜாக் பிறவேர்: சில குறிப்புகள்

*- க.கலாமோகன் -*

*ஜாக் பிறவேர் (Jacques Prevert) 1900ஆம் ஆண்டு நுயியில் (Neuippy) பிறந்தார். பிரான்ஸின் மிகவும் தரமான கவிஞர்களில் ஒருவர். பாடல்கள் நிறைய எழுதியுள்ளார். திரைப்படம், புகைப்படம் இவைகளிலும் அதீத ஆர்வம் காட்டியவர். சர்ரியலிச இயக்கம் இவரைத் தனது பங்காளிகளில் ஒருவராகக் கருதுகிறது. வார்த்தைகள், நிகழ்ச்சி, மழையும் அழகியகாலமும், ஜந்துகள், பலடார் தீவுகளின் கடிதம், வரலாறுகள், அலங்கோலம், விஷயங்களும் ஏனையவைகளும், வாரஇதழ்கள், மரங்கள், ஐந்தாவது காலம், இரவுச் சூரியன் போன்றவை பிறவேரின் கவிதா அறுவடைகள். சாதாரண மொழிக்கூடாக அசாதாரணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்ட பிறவேர், 1977ஆம் ஆண்டு காலமானார்.*

### *கிரகணம்*

லூயிஸ் 16,
சூரியமன்னர் என்றும் இவரை நாம் அழைத்தோம்.
இவர் எப்போதும்,
துவாரமிடப்பட்ட ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார்.
இவரது ஆட்சியின் கடைசிக் காலகட்டத்தில்,
ஒரு இரவு கருமையாகவிருந்தது
சூரியமன்னர் தனது கட்டிலிலிருந்து எழுகின்றார்
தனது கதிரையில் இருக்கச் செல்கின்றார்.
அத்துடன் மறைந்து போகின்றார்.

பிரெஞ்சு மொழி மூலம் - ஜாக் பிறவேர்
தமிழில் - க.கலாமோகன் -
(பிரான்ஸ்)

இலங்கையில் தமிழர்கள் அரசுக்கோ, அரசதலைவர்கட்கோ தலையிடியை ஏற்படுத்துவது என்பது வியப்புக்குரியதல்ல. ஆனால் தமிழர்கள் இன்னோர் நாட்டின் அரசுக்கும் அரசதலைவர்கட்கும் தலையிடியைக் கொடுப்பவர்களாக, அரசாங்கத் தலைவர்களை பதவியைவிட்டு ஓடவைப்பவர்களாக மாறியுள்ளது வியப்புக்குரியதுதான்.

இவ்வாறான ஒரு நிலை டென்மார்க் நாட்டில் தோன்றியுள்ளது. டென்மார்க் நாட்டின் பிரதமர் பௌல் செலூத்தருக்கே இத்தகைய நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. டென்மார்க் நாட்டவர்கள் இப்போதெல்லாம் வேறுவிடயம்பற்றிக் கேட்பதில்லை; செலுத்தர் எப்போது பதவி விலகுவார் என்றே கேட்கின்றனர். அதற்குக் காரணம் 'தமிழர் விவகாரம்'தான்.

1987 முதல் 1989வரையிலான காலப் பகுதியில் டென்மார்க்கில் அரசியற் தஞ்சம் கோரி வந்த தமிழர்களின் குடும்ப மீளிணைவு விண்ணப்பங்கள் கையாளப்பட்டமை தொடர்பாகவே இந்த விவகாரம் எழுந்துள்ளது. இவ்வாறான விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதை நிறுத்திவைக்குமாறு நீதியமைச்சர் எரிக் நின் ஹன்சன் உத்தரவிட்டிருந்தார். இதுவே பிரச்சனையின் மூலகாரணம். இவ்வாறு விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதை இடையில் நிறுத்துவது டென்மார்க் சட்டவிதிகட்கு முரணானது என்பதாலேயே பிரச்சனை உருவாகத் தொடங்கியது.

இது நேரடியான அதிகாரத் துஷ்பிரயோகம் என டென்மார்க் சட்டவல்லுனர்கள் வர்ணித்துள்ளனர்.

அமைச்சர் நின் ஹன்சன் இந்த விவகாரம் தொடர்பாக அரசுடனோ மக்களுடனோ கலந்தாலோசிக்காமல் சுயமாக முடிவு எடுத்தார். இதற்கு முன்னர் இவ்வாறு, விண்ணப்பங்களைப்

# டென்மார்க் பிரதமரும் தமிழர்களும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரிசீலிப்பதை நிறுத்துமாறு இவர் கட்டளை இட்டது கிடையாதாம். நீதி அமைச்சில் பணிபுரியும் பல அதிகாரிகள், ஊழியர்கள் எதிர்த்தபோதும் நின் ஹன்சன் இந்த முடிவை எடுத்தார். இவ்வாறு முன்னர் ஒருபோதும் நிகழவில்லை எனக் கூறப்படுகிறது.


நீதியமைச்சர் நின் ஹன்சன், பிரதமர் செலூத்தரின் நெருங்கிய சகாவும் ஆலோசகரும் ஆவார். அகதிகள் எதிர்ப்பாளருக்கு 30 செப்டம்பர் 87 திகதி இடப்பட்ட கடிதம் ஒன்று பிரதமர் செலுத்தரினால் அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தமிழர்களுக்கு குறைந்த சலுகையே காட்டப்படும் எனக் குறிப்பிடப் பட்டிருந்ததாம். இதனால் நின் ஹன்சன் மீது முழுப் பழியையும் போட்டுவிட்டு செலூத்தர் தப்ப முடியாமல் உள்ளது.

இந்த நிகழ்ச்சியை 'வோட்டகேட்' ஊழல் போன்றது எனப் பத்திரிகைகள் வர்ணித்துள்ளன. இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் வாய்ப்பு பிரதமர் செலூத்தருக்கு உண்டு. ஆயினும் இந்த விளக்கத்தில் புதிதாக எதையும் கேட்க முடியாது என்றே பலரும் கருதுகின்றனர்.

செலூத்தர் கடந்த ஒன்பது வருடங்களாக டென்மார்க் பிரதமராக இருக்கிறார். ஆனால் இந்தப் பிரச்சனையால் பதவிவிலகுவதை இவர் விரும்பவில்லை எனத் தெரியவருகிறது. எதிர்க் கட்சிகள் இவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என பலர் விரும்புகின்றனர். அத்தோடு செலூத்தர் போதிய அவகாசத்துடன் பதவி விலகினாலேயே மக்கள், அவரது அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றித் தெளிவான முடிவுக்கு வரமுடியும் என நம்பப் படுகிறது.

கே.சுகுமார்
டென்மார்க்




<u>பிரித்தானிய இயக்குநர்</u>

தனது படைப்புகள் மூலம் பலநாட்டு மக்களைக் கவர்ந்த இங்கிலாந்து நாட்டு திரைப்பட இயக்குநர் டேவிட் லீன் ஏப்ரல்மாத நடுப்பகுதியில் காலமானார். இறக்கும்போது இவருக்கு வயது 83.

இவர் தனது 30ஆவது வயதில் ஜோர்ஜ் பேர்னாட் ஷோவின் 'பிக்மாலியோன்' திரைப்படத்தை இயக்கினார். மூன்று வருடத்தின் பின்னர் பேர்னாட் ஷோ எழுதிய 'மேஜர் பார்பரா' திரைப்படத்தையும் இயக்கினார். டேவிட் லீன் இயக்கிய திரைப்படங்களில் அவர் கையாண்ட யுக்திகள் (தொழினுட்ப சிறப்பும்) பிரபல்யமானவை.


1942ஆம் ஆண்டில் நோவல் சொவார்ட் இணைந்து தயாரித்த 'In Which We Serve' திரைப்படம் பல பரிசுகளைப் பெற்றுக் கொடுத்தது. இவர் இயக்கிய ஒவ்வொரு படமும் ஒவ்வொரு வகையில் சிறப்புமிக்கவை. இவற்றில் 'Dr. Zhivako', 'Passage to India' என்பன குறிப்பிடத் தக்கவை.

- திரைப்பித்தன் -

காலத்துக்குக் காலம் ஹொலிவூட் திரையுலகம் பணம் சம்பாதிக்க அந்தந்த காலப்பகுதியில் இடம்பெற்ற உலகநடப்புகளை வைத்து படம் தயாரிப்பது வழக்கம். இரண்டாம் உலகமகா யுத்தத்தைத் தொடர்ந்து அதை மையமாக வைத்து பலநூறு படங்கள் வெளிவந்தன. 70ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அமெரிக்க- வியட்நாம் யுத்தத்தை வைத்து ரம்போ பாணியில்- விழுந்தாலும் மீசையில் - மண்படவில்லை என்ற பாணியில் சில பெரிய அளவிலுமான தயாரிப்புகளில் இறங்கியுள்ளன.

'மோசன் பிக்சர்ஸ்' பட நிறுவனத்தினர் டாவிட்லீனின் படமான 'பிரிட்ஜ் ஓவர் இவாய்' படத்தை ஞாபகப்படுத்தும் பாணியிலான படமொன்றைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இப்படம் அமெரிக்கா, இங்கிலாந்து, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளின் நலன்களைப் பேணுவதோடு, மூன்று விமானஓட்டிகள் குவைத்தை விடுவிக்கும் யுத்தத்தில் பங்குபற்றியதைப் பற்றியதாகும்.

## வளைகுடா யுத்தம் திரைகளில்...



பலபடங்கள் வெளிவந்தன. இதைத் தொடர்ந்து வியட்நாமில் உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களை வைத்து பலபடங்கள் வெளிவந்து பிரபல்யமடைந்தன. இதைத் தொடர்ந்து குறுகிய காலத்தில் பெரும் யுத்தமாக வெடித்தது வளைகுடா யுத்தம்.

இந்தப் போரைத் தொடர்ந்து பல திரைப்பட நிறுவனங்கள் திடீரென விழித்துக் கொண்டு பணம்பண்ணுவதில் இறங்கியுள்ளன. சில சிறிய அளவிலும்,

'கரேன்' பட நிறுவனத்தினர் தயாரிக்கும் படமே வளைகுடா யுத்தம் தொடர்பாக வெளிவரவுள்ள முதற்படமாகும். இந்நிறுவனத்தினரின் தயாரிப்பான 'Human Skild' திரைப்படம் அடுத்தவருடம் மேமாதத்தில் வெளிவரவுள்ளது. இதேகாலப் பகுதியில் '21st Centuary' பட நிறுவனத்தினர் 'Desert Shield' எனும் படத்தைத் தயாரித்து வெளிவிடவுள்ளனர். இதில் இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க கடற்படைவீரர்கள் இரசாயனத் தொழிற்கூடமொன்றை தரைமட்டமாக்குவதற்காக வளைகுடாவுக்கு அனுப்பப்படுவதாக கதை பின்னப்பட்டுள்ளது.

இப்படத் தயாரிப்பு கடந்த வருடம் செப்டெம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. அதாவது வளைகுடாப் போர் தொடங்குவதற்கு முன். இதனால் பலதடவைகள் கதையில் மாறுதல்கள் செய்யப்பட்டதாம்.

எது எப்படியோ வரப்போகும் படங்கள் வளைகுடா போர்பற்றிய உண்மைநிலையைக் கொண்டுவரப் போகின்றனவா என்பது கேள்விக்குறியே!

– திரைப் பித்தன் –

## மௌனம் அறைந்த வாழ்வு

'உன் தேசம் எது?'
'ம்....'
'உன்தேசம் செல்வாயோ
மானிடா?'
ஓயாத கேள்வி மௌனம் கலைக்க,
சொல்வேன்.
'யமபவனி சிறக்க
வெண்மேகம் துரத்தி
குண்டுவிமானங்கள் நிறைக்கும்
ஆகாயம்
எரிகந்தகம் சுமக்கும்
காற்று
கொதிசாம்பல் உதிர்க்கும்
வீதி
உடல் தங்க தலையிழந்த
குழந்தைகள்
முதுகைப் பிளந்து சுவைதேடும்
தரகன்
பச்சிலை மென்று நீண்டது
இரவு
இது வாழ்வைத் தின்ற
என்தேசம்!'

மீண்டும் உலுப்பும்
'உன்நிலை கூறு....'
சுவை இழந்து
சொல்வேன்
'கருஞ்சீலை சுற்றுண்ட
கண்கள்,
நீள்தையுண்ட
வாய்,
பலமாய்ப் பிணையுண்ட
கைகள்,
குதிவெட்டி வலிகொண்ட
கால்கள்,
சிறை எடுத்து
சுடுமணலில் புதையுண்ட
சிந்தனை
மௌனம் அறைந்த வாழ்வு!'

இவற்றோடு கூடவே
அழுத்தும் கட்டளை
'போராடு!
மானமுள்ள தமிழனே
அழியும் தமிழ் காக்க
போராடு
உன்னுயிர் தமிழுக்கே!'

தட்டுத் தடுமாறி எழுகிறேன்
போர்முனை நோக்கி,
தற்காலிக
ஊன்றுகோல் வேண்டி
முறிந்த துப்பாக்கிகளை
துணைதேடியபடியே.....

● சின்னா



## இப்படி நிகழ்ந்தது அது!
## – முஸ்லீம் மக்கள் மீதான வெளியேற்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் –

(யாழ். பல்கலைக்கழக மனிதவுரிமைகட்கான ஆசிரியர் அமைப்பு வெளியிட்ட ஆறாவது அறிக்கையில், முஸ்லீம் மக்களது வெளியேற்றம் தொடர்பான சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு இது. தமிழில்: ஜெயராஜ்)

### மன்னார்– ஒக்டோபர் 21–28

இப்பகுதியில் வரும் தகவல்கள் யாழ், மன்னார் தமிழ் வட்டாரங்களில் இருந்தும், தெற்கிலுள்ள முஸ்லீம் அகதிகளிடம் இருந்தும் பெறப்பட்டவை.

முஸ்லீம்களின் படுகொலையில் ஈடுபட்ட, முஸ்லீம்களுக்கு எதிரான மனப்பாங்குள்ள புலிகள் கிழக்கிலிருந்து, இந்த 'நடவடிக்கைக்காக' கொண்டுவரப் பட்டனர். தமிழ்மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் இடையே வேறுபாட்டைக் காணவேண்டிய நிலை காரணமில்லாமலேயே உள்ளூர்த் தலைவர்களுக்கு ஏற்பட்டது. இது அவர்களிடையே தெளிவின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. எனினும் ஒத்துழைக்குமாறு பணிக்கப்பட்டனர். மன்னாரில் முஸ்லீம் இரும்பு வியாபாரிகள் புலிகளுக்காக ஆயுதங்கள்கூடச் செய்துள்ளனர்.

கரிகாலனின் கிழக்குப் பகுதிப் புலிகள் மன்னாரை வந்தடைந்தவுடன், 21ஆந் திகதி இரவு 11மணிக்கு எருக்கலம்பிட்டிக்குச் சென்றனர். இந்நடவடிக்கையில் 300பேர் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. 1200 வீடுகளில் 70% ஆனவற்றில் பணம், நகைகள் கொள்ளையடிக்கப் பட்டன.

பாத்திமா உமலு ஒரு குழந்தைக்குத் தாயான 29வயது விதவை. மாவரைத்தும், விறகு பொறுக்கியும் தனது வாழ்வை



ஓட்டிய அவரது முழுச் செல்வமும் ஒன்றரைப்பவுண் நகையாகவே இருந்தது. அதுவும் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டது. உள்ளூர்ப் பிரமுகர்களில் ஒருவரான சுபர்தீன் வீட்டுக்குப் புலிகள் வந்தபோது சுபர்தீனின் சகோதரர் அங்கே இருந்தார். அவ்வீட்டில், அரசபடைகளிடம் இருந்து பாதுகாக்கவென மின்சாரப் பொருட்கள் தமிழர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்டு ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. இதையறியாத சகோதரர் மின்சாரப் பொருட்கள் அங்கிருப்பதை மறுத்தார். தேடுதலின்பின் புலிகளில் ஒருவர் அவரது தலைக்குமேல் பிஸ்டலை வைத்துச் சுட்டார். அதிர்ச்சியுற்ற சகோதரர் புலிகள் கேட்ட அனைத்தையும் கொடுத்துதவினார்.
மின்சாரப் பொருட்களை விற்கும் 'சி.எஸ். சுலைமான் அன் சன்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் இலங்கை இராணுவம் வரக்கூடும் என்ற அச்சத்தில் கடையிலிருந்த சகல பொருட்களையும் எருக்கலம்பிட்டியிலுள்ள தனது மருமகள் வீட்டில் வைத்திருந்தார். புலிகளது

நடவடிக்கைக்குப் பின் இப்பொருட்களை மக்களுக்கு இலவசமாக விநியோகித்தார். இதையறிந்த புலிகள் சகல பொருட்களையும் 24ஆந் திகதி மாலை 5மணிக்குமுன் மீளப் பெறுமாறு எச்சரித்தனர்.
24ஆந் திகதி மாலை 4மணிக்கு ஒலிபெருக்கிகள் மூலம் புலிகள் பகிரங்க அறிவிப்பு ஒன்றை விடுத்தனர். "மன்னார்த்தீவில் வாழும் சகல முஸ்லீம்களும் 28ஆந் திகதிக்குள் வெளியேற வேண்டும், வெளியேறமுன் அவர்கள் புலிகளிடம் அனுமதி பெறவேண்டும், வெளியேறும் வழியைப் புலிகள் தீர்மானிப்பர்"
அநேக தமிழர்கள் இதனால் மிகவும் வருத்தமடைந்தனர். உள்ளூர்ப் பிரஜைகளின் கூட்டம் 25ஆந் திகதி காலை ஒழுங்கு செய்யப்பட்டது. மடு தேவாலய பிஷப்பால் வரமுடியவில்லை. கத்தோலிக்க மதகுருமார்கள், தொண்டர் நிறுவன அதிகாரிகள் போன்றோரும் இதில் சமூகமளித்தனர். கூட்டமுடிவில் தூதுக்குழு ஒன்று உள்ளூர்ப் புலித்தலைவர் சுரேசை (முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர்) சந்தித்து வெளியேற்ற உத்தரவை

ரத்துச்செய்ய வேண்டினர். இந்த உத்தரவு உயர்மட்டத்தில் இருந்து வந்ததாகவும், தன்னால் எதுவும் செய்ய முடியாதென்றும் சுரேஸ் கூறினார். தயக்கமுற்ற யாழ். பிரஜை ஒருவர், முடிவு உயர்மட்டத்தினதாயின் அதை அப்படியே விட்டுவிட வேண்டும் என்றார்.

கத்தோலிக்க குருமார்கள் சிலர் வற்புறுத்தி, 'சுரேஸ் பொறுப்பில்லாவிடின் யார் இந்நடவடிக்கைக்குப் பொறுப்பு?' எனக் கேட்டனர். மன்னார்க்குழு இதற்குப் பொறுப்பில்லை எனக்கூறிய சுரேஸ், மட்டக்களப்புக் குழுவே இதற்குப் பொறுப்பு என்றார். பொறுப்பாளர்களுடன் பேச ஒழுங்குசெய்யுமாறு வற்புறுத்திய மதகுரு, வெளியேற்ற உத்தரவு நியாயமற்றது என்று வாதிட்டார். இறுதியாக, "(வெளியேற்ற) முடிவு மாற்றப்பட முடியாது, ஏனெனில் இம்முடிவு தலைவராலேயே எடுக்கப்பட்டது" என்றார் சுரேஸ். இதுபற்றி பின்னரே அவர்களால் விளங்கமுடியும் என அவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், முடிவை நடைமுறைப் படுத்துவதுபற்றி ஆலோசிப்பதற்காக இருதினங்கள் வெளியேற்றத்தை நிறுத்துவதாக உறுதியளித்தார். தூதுக்குழு உடனடியாக எருக்கலம்பிட்டிப் பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லீம்களை அப்படியே இருக்க வேண்டினர்.

முஸ்லீம் மக்கள் மீதான தமது உத்தரவை தமிழர்கள் எதிர்க்கும் ஒரு சங்கட நிலையில் புலிகள் இருந்தனர். எனினும் தமது தந்திரங்களில் அவர்கள் எப்போதும் குறையவில்லை. 26ஆந் திகதி இரவு, இரண்டாவது முறையாக எருக்கலம்பிட்டியில் குவிந்த புலிகள், பயணத்துக்குத் தயாராக இருந்த பொதிகளை சுலபமாகக் கொள்ளையடித்துச் சென்றனர்.


இது நிகழ்ந்தபின் பிதா குரூசிடம் சென்ற முஸ்லீம்கள், இரண்டாவது முறையும் இவ்வாறு நிகழ்ந்தபின் தம்மால் அங்கு இருக்கமுடியாது எனவும், கிழக்கில் கொலைசெய்த இவர்கள், தம்மை வெளியேறுவதற்கே உத்தரவிடுகிறார்கள் எனவும் கூறினர். உயிர்ப் பிச்சைக்காக அவர்கள் நன்றியோடு வெளியேறக்கூடும். பிதா குரூஸ் மீண்டும் புலிகளிடம் சென்று வெளியேற்ற உத்தரவை நவம்பர் 2ஆந் திகதிவரை வெளியேற்ற உத்தரவை தள்ளிப்போடும்படி வேண்டினார்.

உண்மையில் புலிகளால் முஸ்லீம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட பொருட்களில் பலவும் (அரசபடைகளது பயத்தால்) தமிழர்களால் பாதுகாப்புக்காக அவர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டவை.

ஒவ்வொரு முஸ்லீம் குடும்பத்துக்கும் ஒருபவுண்நகை, 2000ரூபா, ஐந்து பயணப் பொதிகள் என்பன அனுமதிக்கப்பட்டதோடு, அச்சடிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களும் (Clearence) வழங்கப்பட்டன.

28ஆந் திகதி எருக்கலம்பிட்டிக் கிராமம் முற்றாக மூடப்பட்டது. தமிழர்கள் முஸ்லீம் பகுதிகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. முஸ்லீம்களுடனான சகலவிதத் தொடர்புகளும் முற்றாகத் தடைசெய்யப்பட்டன. தமது பொருட்களை எடுப்பதற்காக தமிழர்களும் அனுமதிபெற வேண்டியிருந்தது. பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த தனது குடும்பப் பொருட்களை எடுத்த சிறுவன் ஒருவன் முதல்நாள் தாக்கப் பட்டிருந்தான். முதலில் அவன் நிறுத்தப்பட்டு புலிகளின் முகாமுக்குச் செல்லப் பணிக்கப்பட்டான். பதிலாக முதலில் வண்டிலை வீட்டுக்கும், பிறகு முகாமுக்கும் செலுத்த அவன் யோசித்திருந்தான்.

# படம் சொல்லும் கதை



*நவம்பர் மாத நடுப்பகுதியில் நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஓவிய ஏலவிற்பனையில் உலகப் புகழ்பெற்ற ஓவியர் வின்சன்ட் வான்கோவின் ஓவியம் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளது. வின்சன்டின் முக்கிய ஓவியங்களில் ஒன்றான 'பூந்தோட்டம்' ஓவியமே இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. ஒது 80 இலட்சம் அமெரிக்க டாலருக்கு (5கோடி நோர்வீஜிய குரோனர்களுக்கு) விற்கப்பட்டது. சாதனை தானே?*

*-ரவிவர்மா-*

ஐந்து தென்னைமரத்தடி என்ற கடற்கரைக்கு புதுக்குடியிருப்பு, தாராபுரம், உப்புக்குளம், எருக்கலம்பிட்டிப் பகுதி முஸ்லீம்கள் கொண்டுசெல்லப்பட்டு அங்கு வள்ளங்கள் கிடைக்கும்வரை காத்திருக்க விடப்பட்டனர். 28ஆந் திகதி மன்னார் அகதிகள் புனர்வாழ்வு ஒருங்கமைப்பு (MARR), மன்னாரில் செய்யப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பாண்களையும் வாங்கி, புலிகளின் அனுமதியுடன் கொண்டுசென்று நீருடன் வழங்கியது. மூன்று தினங்களுக்கு மேலாக 60மைல் தொலைவிலுள்ள கற்பிட்டிக்கு முஸ்லீம்கள் கடல்வழியாகச் சென்றனர். கற்பிட்டி, மன்னார் மீனவர்களது படகுகள் இதற்குப் பாவிக்கப்பட்டன. பெரும்பாலான பயணங்கள் நெருக்கடியும் ஆபத்தும் நிறைந்ததாக அமைந்தன. குளிரில் விறைத்திருந்த பெற்றோர், தமது குழந்தையைக் கடலில் தவறவிட்டு சிறிது நேரத்தின் பின்பே அதை அறிந்த சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. மன்னார்த்தீவு தவிர்ந்த வேறு எந்த உலகப் பகுதியையும் அறியாத வயதான, நோயாளிகளான சிலர் மனோரீதியாகவும், உணர்வுரீதியாகவும் அனுபவித்த கொடுமைகள் பரிதாபகரமானவை.

மன்னாரின் பிரதான பகுதியில் (தீவு தவிர்ந்த- விடத்தல்தீவு, அடம்பன், முள்ளிக்குளம், வட்டக்கண்டல், பெரியமடு, பரப்பங்கண்டல், முருங்கன் போன்றவை தவிர்ந்த) 25ஆந் திகதி ஓர் அறிவிப்பு விடுக்கப்பட்டது. சகல வாகனங்கள், எரிபொருள், சைக்கிள்கள், மின்சார உபகரணங்கள் போன்றவற்றை அருகிலுள்ள பாடசாலைகளிலோ, பள்ளிவாசல்களிலோ ஒப்படைக்குமாறு முஸ்லிம்கள் கேட்கப்பட்டனர். 26ஆந் திகதி முஸ்லீம்கள் முகாமில் தம்மைப் பதிவுசெய்தபின் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்டபடி செல்ல உள்ளூர்ப் புலிகளால் பணிக்கப்பட்டனர். முதலில் அவர்கள் மடுவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சோதனையிடப் பட்டனர். அடுத்ததாக பன்றிவிரிச்சானில் சோதனையிடப் பட்டனர். அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேலாக இருந்த பணம், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு அதற்குப் பற்றுச்சீட்டுகளும் வழங்கப்பட்டன. வவுனியாவில் நிகழ்ந்த அடுத்த சோதனை மேலும் வழிப்பறியாகவே அமைந்தது. பணம், நகைகள் உட்பட சுடுதண்ணீர்ப் போத்தல்களும் புலிகளால் அபகரிக்கப்பட்டன. வவுனியா வந்த பலர் எங்கும் செல்ல முடியாதவாறு தவித்தனர். போவதற்கு இடமிருந்த பலரும் போவதற்குரிய பணமில்லாது தவிக்க நேரிட்டது. ■

---

(12 பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு உரிய முறையில் கௌரவிக்கப்படும் வாய்ப்பு இல்லாத நிலையில் இந்த மரணம் நிகழ்ந்தது துயர் தருவது. உலகம் எங்கும் பரந்து வாழும் அவரது மாணவர்கள் மட்டுமே அவரை நினைவுகூர்தல் இயலும்.

மறக்கப்பட்ட பல மரணங்களுள் ஒன்றாக இந்த மரணமும் ஆகிவிடாது. தமிழ் மணக்கும் அந்தக் குரல் அம்பனை வயல் வெளிகளில் எப்போதும் நிறைந்திருக்கும். கடந்துபோகும் வண்டிற் சத்தங்களும், சூடடிக்கும் உழவர்களின் ஓசையும் அதற்கு அணிசேர்ப்பன. ■

** உலகில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க, மத்தியகிழக்கு நாடுகளே பெரும்பாலும் சிறார்களை ஆயுதமேந்த வைக்கின்றன.*

**சுமைகள்**

*பல்சுவை மாத இதழ்*
Tamil Union,
Achter Den Winkel 370,
6372 R.V.Landgraaf
The Netherlands



# நோர்வேயின் விலையுயர்ந்தவர்..

இன்று நோர்வேயில் அதிகவிலைக்கு விலைபோகும் ஓவியங்களைப் படைப்பவர் ஏசர் அபகான். இவரின் ஓவியங்கள் பல இலட்சம் குரோணர்களுக்கு விலைபோகின்றன. நோர்வேயில் நடைபெற்ற அபகானின் கடைசி விற்பனைக் காட்சியின்போது சுவையான சம்பவமொன்று நடந்தது. இவ்விற்பனைக் காட்சி நடைபெறுவதற்கு அரைமணிநேரம் முன்பாகவே அனைத்து ஓவியங்களும் விற்பனையாகி இருந்ததுதான் அந்த சம்பவமாகும். இன்று இவரது புகழ் நோர்வே நாட்டையுந் தாண்டிப் பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.



அபகான் சிலவருடங்களுக்குமுன் தான் விற்ற ஓவியங்களை மீளப் பணங்கொடுத்து வாங்குகிறார் (இன்று இவற்றின் விலை பல மடங்குகளாக ஏறியுள்ளது). இவற்றை மீளவேண்டி, அவற்றில் சிலவற்றுக்கு புதுமெருகூட்டி அவற்றை உலகம்பூராவும் காட்சிப்படுத்த ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

இத்துணை முக்கியம் வாய்ந்த அபகான் உண்மையில் நோர்வே நாட்டவர் அல்லர், நோர்வேயில் பிறந்து வளர்ந்தவருமல்லர். இவர் துருக்கி தேசத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தையார் ஒரு சிற்பியாவார். அபகான் துருக்கியில் பௌதீக விஞ்ஞான படிப்பை முடித்துவிட்டு தனது மேற்படிப்பைத் தொடர்வதற்காக மனைவி சகிதம் இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்தில் மஞ்சஸ்தர் பல்கலைக்கழகத்தில் ஏழு வருடங்கள் உயர்கல்வி பயின்றார். இதன் தொடர்ச்சியாகவே நோர்வேயில் பேர்கன் பல்கலைக்கழகத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அப்போதுதான் அவர் தன்னகத்தே பதுக்கி வைத்திருந்த கலையாற்றலைப் பரிசோதிப்பதற்காக ஓவியங்களைத் தீட்டத் முடிவுசெய்தார.

பேர்கன் பல்கலைக்கழகக் கட்டடத்தில் இருந்த ஓவியம் இவரைக் கவர்ந்திழுத்தது. அவ் ஓவியம் வேறுயாருடையதுமல்ல, நோர்வேயின் அதிமுக்கிய ஓவியர்களுள் ஒருவரான ஒட் நேதுரும்மின் ஓவியம் அது. இவ்வோவியம் இவர்மீது அளவுக்கடங்காத தாக்கத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து இவர் உடனடியாக தனது ஓவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகளை உருவாக்கத் தொடங்கினார். இதனால் தனது பௌதீக விஞ்ஞான படிப்பை நிறுத்திவிட்டு தனது முழு வாழ்க்கையையும் ஓவியத் துறையில் பயன்படுத்த விரும்பினார். ஆனால் அவர் நினைத்ததுபோல் அது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. காரணம் இவர் பௌதீக விஞ்ஞான துறையைக் கைவிட்டு ஓவியத்துறையில் இறங்கினால் நோர்வேயில் வதிவிட அனுமதி இல்லாது போய்விடும். இதனால் அபகானின் மனைவி நாட்டைவிட்டு வெளியேற, இவர் துரொம்சோ நகரில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். பின்னர் ஓவியர் ஒட் நேதுரும்மைத் தேடி ஒஸ்லோ நகருக்கு வந்தார். தனது படைப்புகளை நேதுரும்மிடம் காட்டி தனது நிலைமையையும் எடுத்துக்கூறி, தனக்கு அவ்விடத்திலேயே நல்ல ஒரு முடிவு சொல்லும்படி கூறினார்.

அவரது படைப்பாற்றலைக் கண்ணுற்ற ஒட் நேதுரும் முகம் மலர, "இந்த அறை உன்னுடையதே, உனது ஓவிய முயற்சியைத் தொடர்வாயாக!" என்றார். அத்துடன் நோர்வேயில் வதிவிட அனுமதிக்காக தனது கைப்படக் கடிதமொன்று எழுதி வெளிநாட்டவர் அலுவலகத்துக்கு அனுப்பிவைத்தார். அதில் அபர்கான் தன்னுடைய மாணவனாக தேர்ந்தெடுக்கப் பட்டதாகவும் எழுதியிருந்தார். இதன்பின் இவர் இங்கு வசிப்பதற்கான அனுமதியை பொலீசார் வழங்கினர்.

இதன் பின்னரும் பிரச்சனை தீர்ந்தபாடில்லை. தங்கி இருப்பதற்கு ஒரு சிறியஇடமும், பணமும் பிரச்சனையாக இருந்தது. இவருக்கு ஒரு பாதிரியார் உதவிசெய்ய முன்வந்தார். எத்துணை பிரச்சனைகள் வந்தபோதும் அபகான் ஓவியம் வரையும் முயற்சியைக் கைவிடவில்லை. தீவிரமாக முயன்றார். இரவுபகலாக ஓவியத்தில் மூழ்கிப் போனார்.

அபகான் தனது முதலாவது ஓவியக் கண்காட்சியை 1986ஆம் ஆண்டு நடாத்தினார். இவ் ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்ட 22ஓவியங்களுள் 16ஓவியங்கள் நல்ல விலைக்கு விற்பனையாகின. இதனால் இவரது பணக்கஷ்டம் ஓரளவுக்குத் தீர்ந்தது. அத்தோடு இவருக்கு நோர்வேயில் நிரந்தர வதிவிட அனுமதியும் கிடைத்தது.

இன்று அபகான் பலவித கஷ்டங்களுக்கு ஆட்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு



உதவுவதில் முன்னிற்கிறார். அத்தோடு பல நோர்வேஜிய, வெளிநாட்டு மாணவர்களுக்கு ஓவியம் கற்றுக் கொடுக்கிறார்.

அபகான் நவீனபாணி மற்றும் பாரம்பரியப் பாணி ஓவியங்களில் இருந்து பெற்றுக்கொண்ட தாக்கத்தைப் தனது பாணியில் நிறச்சேர்க்கையால் ஜாலம் காட்டுகிறார். ஒருநாளைக்கு குறைந்தது 12மணி நேரமாவது ஓவியவரைதலில் செலவிடுகிறார். இதனாலேயே தனக்கு நோர்வேஜிய மொழியைக் கற்றுக்கொள்ள நேரம் கிடைப்பதில்லை என்று கூறும் இவர், ஆங்கில மொழிமூலமே பலருடனும் உரையாடுகிறார்.

- சித்திரகுப்தன் -

ஆதவனின்

# மண்மனம்

## அத்தியாயம் 16



வாழ்க்கையைத் தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருந்தான் ரகுநாதன். கனவுகள் கலைந்து முடிந்து விட்டன. காலங்களும் உருண்டு ஓடிவிட்டன. சந்திராவின் கதை கனவாய்ப் போனதும் அப்பாவின் எதிர்பாராத சாவும் அம்மா இளைத்துப்போய் அலைக்கழிந்து வாழாவெட்டியாய்... நடைப்பிணமாய் ஆனதும்; இந்திரா புருஷனுடன் 4பிள்ளைகள் பெத்து 'பேத்டே' கொண்டாடியதும்; எல்லாமே நினைத்துப் பார்க்க இனிக்குங் கனவாய்ப் போய்விட்டது ரகுநாதனுக்கு.

தாடி நீண்டு... ஒரு கிழவன் மாதிரி...

அல்லது முகத்தில் 'பிளாஸ்டிக் சேஜரி' செய்த ஒரு 'அனட்டமி பேஷண்ட்' மாதிரி...

'கதையை மட்டுங் கேக்கலாம். ஆனா முகத்தைப் பாக்கேலாது' எண்டு அவன்ரை ஊர்ச்சனம் சொல்லுற அளவுக்கு அவன்ரை முகம் விகாரமாய்ப் போயிட்டுது. சில பெட்டையள் முகத்தைப் பாத்து... 'ரகு நல்ல வடிவப்பா' எண்டு சொல்லுவதும் சில பெட்டையள் 'டி.ராஜேந்தர் மாதிரி' எண்டு சொல்வதும்... சிலதுகள் 'ஆள் கறுப்பு ஆனா உடம்பைப் பார்' எண்டு சீண்டுவதும்...

ரகு இளைச்சுத்தான் போயிட்டான். முந்தின உக்கிரம் இல்லை. ஏதாவது மனக்கவலை வந்து மடக்கிப் போட்டுது. மனக்கவலை. நல்ல ஒரு சொல்லு. எல்லாத்துக்கும் பாவிக்கலாம்.

'சோமன் தற்கொலை செய்தது மனக்கவலையால'

'சந்திரா இயக்கத்துக்குப் போனது மனக்கவலையால'

'ஹிட்லர் யூதர்களை வெறுத்தது மனக்கவலையால'

'கோட்சே காந்தியைச் சுட்டது மனக்கவலையால'

'ரகுநாதன் குடிக்கத் தொடங்கி இப்பிடிச் சீரழிஞ்சது மனக்கவலையால'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சனங்களுக்கு ஏதாவதொரு செயலுக்குக் காரணந் தெரியேல்லை எண்டா உடனை சொல்லுற முதல் வாக்கியம் 'மனக்கவலை'

ரகுநாதனுக்கு என்ன மனக்கவலை? எல்லாருக்கும் நடக்கிற பிரச்சனைதான் அவனுக்கும். நாட்டில சகல சாதாரண ஜீவிக்கும் இப்படித்தான் பிரச்சனை நடக்குது.

"இந்தக் கடற்கரைக்கு என்ன பெயர் எண்டு எனக்குத் தெரியாது. கடற்கரைக்கு ஆராவது பேர் வைக்கிறதெண்டா ஒவ்வொரு புது அலையைப் பற்றியும் யோசிக்க வேணும். நாளுக்கு நாள்... கணத்துக்குக் கணம் புதிய வடிவமெடுக்கும் அலைகள்... இதற்கு நிரந்தரப் பேர் சூட்ட முடியாது. எனக்கும் ரகுநாதன் எண்ட பெயரில்லை. நான் - 'இமேஜ்' இல்லாத நான் - பெயர் இல்லாத இந்தக் கடற்கரை - 'லேபல்' இல்லாத இந்தப் போத்தல் - இண்டைக்குக் கதைச்சுப் பாப்பம். எங்கையிருந்து தொடங்குவம்? பாசத்திலிருந்தா அல்லது காதலில் இருந்தா அல்லது கடமையில் இருந்தா? ஒண்டும் விளங்கேலை. எல்லாம் சொல்லுகள்தான். சொல்லுகள்தான் முக்கியம் ஏனெண்டா நாங்கள் கதைச்சாக வேணுமே. நாட்டைப் பிரிப்பம்... வேண்டாம் ஒண்டு சேர்ப்பம்.. இல்லாட்டி ஒண்டுசேர்க்கிற மாதிரி நடிச்சுக் கொண்டு பிரிப்பம்... அல்லது பிரிப்பம் எண்டு சொல்லுறதையே வாழ்க்கையின் இலட்சியம் எண்டு சொல்லுவம். என்ன... பெரிய அலைமாதிரி வந்தாய் கேக்கிறன் ஒண்டுஞ் சொல்லாமல் போறாய். சரி... அடுத்தாள் வா! நீ அங்கையிருந்து வரேக்கையே அடிச்சள்ளிக் கொண்டுதான் வாறாய். பாப்பம், நான் கேக்கிற கேள்விக்கு மறுமொழி சொல்லு. நீ வரேக்கை உன்னோடை இழுவுண்டு வந்த சின்னச் சின்ன அலையள் எல்லாம் எங்கே? சரி அடுத்தநாள் வா! உனக்கு வரேக்கையே தெரியும் கரைக்கு வரக்குமுதல் சின்னனாய்ப் போவாய் எண்டு. பிறகேன் உந்த எடுப்பு எடுத்தாய்? சரி அடுத்தாள் வா!... எல்லாரும் வரிசையாய் வந்து உங்கடை கதையைச் சொல்லிப் போட்டுப் போங்கோ. குழப்படி பண்ணக் கூடாது. ஆருக்கேன் தண்ணியடிக்க வேணுமெண்டா... நைசா வந்து காதுக்கை சொல்ல வேணும். நான் ஒழுங்கு பண்ணுவன்... என்ன? நான் உங்களோடை கதைச்சுக் கொண்டிருக்கேக்கை வேறையும் ஏதேன் சத்தங்கள் கேக்குது"

"மெதுவா ஆளைத் தூக்குங்கோ"- அருளண்ணை.

"சாரத்தை இடுப்பிலை வடிவாக் கட்டிவிடுங்கோ"- வேறை ஒரு ஆள்.

"சத்தியும் எடுத்துக் கிடக்குது ஒரேமணம்"- மற்றொரு ஆள்.

"ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்"- இன்னொரு ஆள்.

"ரகு மாமாவுக்கு என்ன நடந்தது?"- யாரோ ஒரு குழந்தை.

கரையில வந்துவந்து மோதும் அலைகளும்... கடற்கரை மணலில் குப்புறச் சரிந்தபடி கிடக்கும் இரண்டு வெற்றுச் சாராயப் போத்தல்களும்...

காற்றுக்கேற்றபடி தம்மை ஆட்டிக் கொள்ளும் தென்னோலைகளும்...

இவைதவிர-

வேறு எதுவும் ஒன்றும் பேசவில்லை.

அந்த உலகம் வெறிச்சோடிக் கிடந்தது.

['மண்மனம்' முதலாம் பாகம் முற்றிற்று]



'மண்மனம்'

## முதலாம் பாகத்துக்குப் பின்னர் ஒரு முன்னுரை

'மண்மனம்' முதலாம் பாகத்தை வாசித்து முடித்துவிட்டீர்கள். என் மனம் உணர்ந்ததை அப்படியே எழுதியிருந்தேன். நாவலுக்குரிய இலக்கணங்களையோ கட்டுக்கோப்புகளையோ எதையும் நான் பொருட்படுத்தவில்லை. உணர்வுக்கும் உண்மைக்கும் முதலிடம் கொடுத்து அவையே என் பேனாவை இழுத்துச் சென்றன. பாத்திரங்கள் படிப்படியாக வளர்த்தெடுக்கப் படவில்லை. பாத்திரங்கள் முழுமையான குணாதிசயத்துடன் வரவில்லை. கதையே இங்கு இல்லை. சம்பவக் கோவைகள் மட்டும்தான் இருக்கின்றன. சம்பவங்கள்கூட ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றுக் காணப்படுகின்றன.

இவற்றைக் குறைகள் என நான் எண்ணவில்லை. இவற்றை நிவர்த்தி செய்வதற்கான முயற்சியை இரண்டாம் பாகத்தில் செய்வேனாயிருந்தால் அது இந்நாவலின் உயிர்த் தன்மையைக் குறைக்கும்; உணர்வோட்டத்தைக் குறைக்கும்; வெறும் கதை பண்ணுதல் ஆகும், மண்ணுக்குரிய மனம் கிடைக்காது போகும். எனவேதான் இரண்டாம் பாகத்திலும் நான் அதைச் செய்யப் போவதில்லை. அதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு கதையே வரக்கூடாது - வெறும் சம்பவங்கள் மட்டுமே எழுதுவேன் என்றும் இல்லை.

மண்ணுக்கு மனம் இருப்பது போல் என் பேனாவுக்கும் ஒரு மனம் இருக்கிறது. அதனுடைய சுதந்திரத்தையும் கவனிக்க வேண்டுமல்லவா? அதன் மனம் காணாதபடி நடந்துகொள்கிறேன்.

'சுவடுகள்' சஞ்சிகையில் கடந்த 16 இதழ்களில் தொடர்ந்து மண்மனத்துடன் பேசிய வாசகர்களுக்கு நன்றி. இரண்டாம் பாகத்தையும் படியுங்கள். இந்நாவலில் வரும் நூற்றுக்கணக்கான மனங்களையும் இந்த, மண்ணையும் என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். முடிவுகள் ஏதும் எடுத்தால் எனக்கும் அறிவியுங்கள். 'கதை' படிக்கவும் 'கதை' பற்றிக் குறைநிறைகளைப் பற்றிக் கதையுங்கள். கதைக்கவும் எனக்கு நல்ல விருப்பம் - என் மண்ணைப் போல.

அன்புடன்

க.ஆதவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• ஒருநாட்டின் அதிபராகவோ பிரதமராகவோ ஒரு பெண்மணி தேர்வு செய்யப்பட்டால் அந்நாட்டில் பெண்கள் எல்லோரும் ஏதோ 'நல்ல நிலை'யில் இருப்பதாக ஒரு அபிப்பிராயம் சிலபேருக்கு ஏற்படுகிறது.

உலகின் முதலாவது பெண் பிரதமரை தந்த எமது தாய்நாட்டில் அரச எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட பெண்களுக்கு, அந்தப் பெண் பிரதமரின் ஆட்சியிலேயே நிகழ்ந்த கொடூரங்கள் மிகவும் மோசமானவை. நீண்டகாலம் இராணுவ ஆட்சியில் இருந்த பங்களாதேஷில் இப்போது ஒரு பெண்ணின் ஆட்சி ஏற்பட்டுள்ளது. அங்குள்ள பெண்களுக்கு இதனால் நேரடியாக ஏதாவது சிறிதளவிலேனும் விடிவு கிடைக்குமா என்பதுதான் தெரியவில்லை.

## நடையர் பார்வையில்

## நாட்டு நடப்புகள்

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கத் தயார் என அண்மையில் அமெரிக்கா அறிவித்தது. நீண்டகால இடைவெளிக்குப் பிறகு இந்த வியாபாரம் நிகழ்வதாக நினைக்காதீர்கள். ஏறத்தாழ ஒருவருடகாலம் ஆயுத விற்பனை நிறுத்தப்பட்டது என்பது அமெரிக்கத் தகவல். இவ்வாறு இடைநிறுத்தப்பட்டதன் காரணம் பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டமையே என அமெரிக்கா கூறியது. தற்போது அமெரிக்கா மீண்டும் ஆயுதவிற்பனையைத் தொடங்கியிருப்பது கொஞ்சம் குளறுபடியான விடயம். உலகின் எல்லாப் பகுதிகளிலும் தனது ஆயுதவிற்பனைக்கு நாடுகளைக் கண்டுபிடிப்பது அமெரிக்காவின் பகுதிநேர வேலை. கடைசிக் கண்டுபிடிப்பு (மீண்டும்) பாகிஸ்தான், பாகிஸ்தான் அணுவாயுதத்தைக் கடலில் கடாசிவிட்டதா அல்லது வைத்திருக்கிறதா என்பது தெரியவில்லை. வைத்திருந்தாலும் என்ன, உலக அமைதிக்கு(!) இப்போது அணுவாயுதந்தான் வழி என்று சொல்கிறார்கள். கொசுறு தெரியுமா? ஒரு கொசுறு: இந்தியாவுக்கு தொழில்நுட்ப ஏற்றுமதியில் அமெரிக்கா தடை விதித்துள்ளது. இதற்குக் காரணமும் இந்தியா தொழில்நுட்ப வளர்ச்சியை அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுத்தல்தான். தகவல், நன்றி: அமெரிக்க செய்தித் தாபனங்கள்

பாலியற் காட்சிகள் போன்றவற்றை தொலைக்காட்சியில் காட்டுவதையே மிகக் கடுஞ் சட்டங்கள்மூலம் தடைசெய்வது நோர்வே. பாலியற் படங்கள் காட்டப்படுவதில் மிக அதிக கட்டுப்பாடுகள் விதிக்கும் நாடு ஐரோப்பாவில் நோர்வேயாகத்தான் இருக்கமுடியும். பாலியற் காட்சிகளை நடாத்தும் இரவு விடுதிகளுக்கும் இங்கு இடமில்லை. அண்மையில் ஒரு நகரத்தில் கொஞ்சம் ஆபாசமான போட்டி ஒன்றை நடாத்த இரவுவிடுதி ஒன்று பொலிசாரிடம் அனுமதி கோரியிருந்தது. பொலீசார் அனுமதி மறுக்கவே ஆத்திரம்(!) கொண்ட இரவு விடுதி வாடிக்கையாளர்கள் சிலர் ஒரு இரவு சிறு ஆபாசக் காட்சியையே நடாத்திவிட்டனர். பல வாடிக்கையாளர்கள் உள்ளங்கிகளுடன் நடனமாடினர். ஒருவர் எல்லா ஆடைகளையுங் களைந்து தனது 'கலை ஆர்வத்தை' வெளியிட்டார். இந்த நிகழ்ச்சிபற்றி விடுதி உரிமையாளரின் கருத்து இது "எனக்கு வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சிதான் முக்கியம், இந்நிகழ்ச்சியில் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள்". இந்த 'மகிழ்ச்சி' வேறிடங்களுக்குப் பரவாது தடுப்பதில் பொலீசார் கவனமாக இருக்கிறார்கள் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. ஒடுக்குமுறையின் விளைவு என்று இதைச் சொல்லலாமா?

ஒருநாள் தொலைக்காட்சிச் செய்தி பார்த்துக் கொண்டிருந்தபோது செய்தியில் ஓர் இளைஞரைக் காணநேரிட்டது. அவர் சோசலிச இடதுசாரிக் கட்சியின் பேச்சாளர்களில் ஒருவர். அவர் பேச்சாளராக இருக்கும் துறை வெளிநாட்டுத் தொடர்புகள். ஆச்சரியமாக இருக்கிறதா? ஒரு கட்சி ஒரு முக்கியமான விடயம் தொடர்பான தனது பேச்சாளராக இத்தனை வயதுகுறைந்த ஒருவரை நியமித்திருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நாட்டிலுள்ள எல்லாத் துறையினரையும், எல்லாத் தலைமுறையினரையும் (குழந்தைகளையல்ல) நாட்டை ஆளத் தெரிவாக்குவதில் இந்நாட்டு மக்கள் எத்தனை தாராளமாக இருக்கின்றனர் என்று ஒரு பெருமூச்சு வந்தது. எமது நாட்டில் ஒரு இளைஞர் அரசியலில் முக்கிய பதவி வகிப்பதென்றால் அவர் முக்கிய அமைச்சர் ஒருவரின் மகனாக/மகளாக இருப்பார். மற்றவர்கள் வேண்டுமானால் ஒரு ஆறுதல் பரிசாக இளைஞரணித் தலைவர்/ தலைவி ஆகமுடியும். இப்போதைக்கு எமது நாட்டின் விதி இப்படித்தான் இருக்கும். அண்மைக் காலத்தில் தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றம் அனுப்பிய பலர் இதற்கு விதிவிலக்கு.

அண்மையில் சோவியத் அதிபர் கொர்பச்சேவ் நோர்வே வந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு தடல்புடலாக இருந்தது ஒருபுறம், எதிர்ப்பு, ஆர்ப்பாட்டங்கள் மறுபுறம் என (ஏதோ ஒருவிதத்தில்) ஒஸ்லோ மிகவும் உற்சாகமாக இருந்தது. கடந்த வருடத்தில் சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்டபோது கொர்பச்சேவ் பற்றி இருந்த அபிப்பிராயம், குறுகிய காலத்தில் மாறியது. முக்கியமாக போல்டிக் குடியரசுகளில் நடந்த ஒடுக்குமுறை கொர்பச்சேவின் 'சமாதானம்' பற்றிச் சந்தேகத்தை உண்டுபண்ணிற்று. இந்தக் கலவையான அபிப்பிராயம் அவரது நோர்வே வருகையின்போது எதிரொலித்தது. பத்திரிகைகளின் கேலிச் சித்திரக்காரர்கள் இந்த சந்தர்ப்பத்தை மிக அழகாக வெளிப்படுத்தினார்கள். உதாரணமாக ஒரு ஓவியம், கொர்பச்சேவின் முன்புறக் கையில் நோபல்பரிசும் மறைக்கப்பட்ட பின்புறக் கையில் வேட்டையாடப்பட்ட (அமைதிப்) புறாவும் முதுகின் பின்புறம் சிலஅம்புகளும் கொண்டதாக இருந்தது. அமெரிக்கா முன்னர் கணிப்பிட்டதைவிட மேலும் அதிகமாக சோவியத்தின் பாதுகாப்புச் செலவீனம் இருப்பதைக் கண்டுபிடித்திருப்பதாக செய்தி வந்தது. ஒளிக்கப்பட்ட அம்புகள் எத்தனையென்று தெரியவில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகள் பதிப்பகம்
சுவடுகள் பதிப்பகம்
சுவடுகள் பதிப்பகம்

சுவடுகள் பதிப்பகம்

சுவடுகள் பதிப்பகம்

சுவடுகள் பதிப்பகம்

சுவடுகள் வாசகர்கட்கும்
இலக்கிய ஆர்வலர்கட்கும்

தமிழில் நூல் வெளியீடு என்பது மிகவும் சிரமமானதும், நடைமுறையில் இழப்புகளை ஏற்படுத்துவதும்கூட. ஆயினும் தமிழில் வெளிவரவேண்டிய பல நூல்கள் இந்தக் காரணங்களுக்காக முடங்கிவிடக்கூடாது. தமிழில் வெளிக்கொணரப்பட வேண்டிய முக்கிய நூல்கள் வெளிவர, வெளிநாடுகளில் வசிக்கும் நாம் எம்மால் இயன்றளவு முயலவேண்டும். இப்பணியில் சுவடுகள் பதிப்பகம் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகிறது. ஏற்கனவே நோர்வேயில் வாழும் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள் கொண்ட 'துருவச் சுவடுகள்' எனும் தொகுதியை நாம் வெளியிட்டுள்ளோம். எனினும் எமது தொடர்ந்த முயற்சிகளுக்கு பொருளாதாரம் ஒரு பெரும் தடையாக உள்ளது. இந்நிலையில் இங்கு வாழும் எம்மவர்களின் உதவியுடன் மேலும் நூல்களை வெளியிட முயல்கிறோம். இம்முயற்சியில் விரைவில் ஈழத்தின் முக்கிய கவிஞர்களில் ஒருவரான சோலைக்கிளியின் கவிதைத் தொகுதி ஒன்று வெளிவர உள்ளது. தொடர்ந்தும் பல நல்ல நூல்களை வெளியிட உங்கள் ஆதரவை நாடுகிறோம். நீங்கள் சிறுதொகையாக உதவினாலும் அது எங்களை மனம் மகிழச் செய்யும். உங்கள் அன்பளிப்புகளை எமது Postgiro கணக்கில் நேரடியாக இடலாம். எமது Postgiro கணக்கிலக்கம்
0824 0221021

முகவரி:
Suvaduhal Pathippaham,
Herslebs Gate 43
0578, Oslo 5
Norway

பணம் பெறுபவரின் பெயரை Suvaduhal Pathippaham எனக் குறிப்பிடவும்.

நன்றி!

● சுவடுகள் பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org